2017 பெப்ரவரி 06
திங்கள்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ■ ஜ.அவ்வல் பிறை 08 ■ பக்கங்கள் 08 ■ மணி 03 ■ ஒளி 021

NAVAMANI DAILY
நவமணி දිනපතා
QD / 154 / NEWS / 2017

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்



எரிகின்ற காஷ்மீரின் ஒரு காட்சி 04



அமெரிக்காவின் பொருளாதார தடைகளுக்கு பதிலடி கொடுப்போம் 08



08

3 - 0

இலங்கை அணியை வீழ்த்தி தென்னாபிரிக்கா ஹெட்ரிக் வெற்றி

## தமிழக முதல்வராக சசிகலா நியமனம்



அ.தி.மு.க. அதிரடி முடிவு

■ திருச்சி சாஹுல் ஹமீத்

அ.தி.மு.க சட்ட மன்ற தலைவராக சசிகலாவை தேர்வு செய்து

07 »»»»





தகவலறியும் சட்ட மூலம்

## தகவல்கள் மறுக்கப்படுமானால் மேல் முறையீடு செய்யலாம்

■ ஆதில் அலி சப்ரி

தகவல் அறியும் சட்டமூலத்தின் அடிப்படையில் பொதுமக்கள் கேட்கும் தகவலொன்றை அரச நிறுவனமொன்றின் தகவல் அதிகாரி வெளியிட மறுக்கும்போது, நிறுவனத்தின் தலைமை அதிகாரி, தகவல் ஆணைக்குழு மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் வரை மேன்முறையீடு செய்யலாம் என்று வெகுஜன ஊடக அமைச்சின் தகவல் அறியும் சட்டமூலம் தொடர்பான ஆலோசகர் பியதிஸ்ஸ ரணவீர தெரிவித்தார்.

இம்மாதம் 3ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்துள்ள தகவல் அறியும் சட்டமூலம்

07 »»»»



## பஷீர் சேகுதாவூத்

# இடை நிறுத்தம்

### மு.கா. உயர் பீடம் ஏகமனதாக தீர்மானம்

அரசியலில் பஷீர் சேகு தாவூத்

| | |
|---|---|
| 1989 - | மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈரோஸில் போட்டி |
| 1989 - | பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் |
| 1994 - | முஸ்லிம் காங்கிரஸில் இணைவு |
| 2000 - | தேசிய பட்டியல் எம்.பியாக நியமனம் |
| 2001 - | பிரதி வீடமைப்பு, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு |
| 2003 - | ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தவிசாளராக நியமனம் |
| 2004 - | தேசிய பட்டியல் எம்.பியாக நியமனம். மாகாண சபைகள் ராஜாங்க அமைச்சர் |
| 2007 - | கூட்டுறவு உள்நாட்டு வர்த்தகப் பிரதி அமைச்சர் |
| 2008 - | கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு |
| 2010 - | பா.உறுப்பினராக நியமனம் |
| 2013 - | உற்பத்தி வள ஊக்குவிப்பு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக நியமனம் |
| 2015 - | எம்.பி. பதவியிலிருந்து விலகல் |


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மகாநாடு எதிர்வரும்12 ஆம்திகதி நடைபெறவிருக்கும் நிலையில் சனியன்று இரவு கூடிய கட்சி உயர்பீடக்கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான

07 »»»»

## மாரடைப்புக்கு புது மருந்து

மாரடைப்பு நோய்க்கான புதிய மருந்தொன்றை இறக்குமதி செய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மாரடைப்பு ஏற்பட்டு மூன்று மணித்தியாலங்களுக்குள் குறித்த மருந்தினை நோயாளிக்கு வழங்குவதன் மூலம், அவரின் உயிரைக் காப்பாற்ற முடியும் என இருதய வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன்



07 »»»»

## இடைநிறுத்தியமை குறித்து மக்கள் நீதிமன்றில் முறையீடு

கட்சியிலிருந்து தன்னை இடைநிறுத்தியது தொடர்பாக மக்கள் நீதிமன்றத்துக்கு செல்வேனே தவிர வேறு நீதிமன்றங்களுக்குச் சென்று நியாயம் கேட்க மாட்டேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளர் பஷீர் சேகு தாவூத் நேற்று தெரிவித்தார். ஸ்ரீலங்கா

07 »»»»

> “நீதி மன்றம் சென்று நியாயம் கேட்கமாட்டேன்
> பஷீர் சேகுதாவூத்

## சைடமுக்கு எதிராக சர்வதேசத்தில் முறைப்பாடு

■ ஆதில் அலி சப்ரி





அங்கீகாரமற்ற மருத்துவர்களை உருவாக்கும் சைடமுக்கெதிராக ஐக்கிய இராச்சியத்தை தலைமையாகக் கொண்டு இயங்கிவரும் மருத்துவ கல்விக்கான உலக அமையத்தில் எதிர்வரும் புதன்கிழமை முறைப்பாடொன்றை முன்வைக்கவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் டாக்டர் ஹரித்த தெரிவித்தார்.

சைடமுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

07 »»»»

முஸ்லிம் விவாக சட்டத்தில் திருத்தம்

## திருத்தக் குழுவின் தலைவர் ஊடகங்களுக்கு விளக்கம்



அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா உட்பட அனைத்து முஸ்லிம் அமைப்புகளின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, இறுதி அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் தொடர்பில் சீர்திருத்தங்களை

07 »»»»

## ஆளும் கட்சி முக்கியஸ்தர்களுடன் ஜனாதிபதி இன்று கலந்துரையாடல்



■ அ.அருண் பிரசாந்த்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் விசேட கலந்துரையாடலொன்றில் ஈடுபடவுள்ளார்.

அரசமைப்பை ஸ்தாபிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வழிநடத்தல் குழுவின் கூட்டம் நாளை 7 ஆம் திகதி பிரதமர் ரணில்

07 »»»»



வீசா ரத்துக்கு இடைக்கால தடை

## நீதிமன்ற உத்தரவை எதிர்த்து அமெ.ஜனாதிபதி வழக்கு

7 நாடுகளுக்கான விசா ரத்து செய்யப்பட்டதற்கு எதிராக நீதிமன்றம் தடை விதித்துள்ள

07 »»»»

## 3482 ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு மலையக பாடசாலைகளில் நியமனம்



மலையகப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியப் பற்றாக்குறையை போக்குவதற்கு 3482 ஓய்வு பெற்ற ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. ஆங்கிலம், விஞ்ஞானம்,

07 »»»»

## நீதித்துறையின் சுயாதீனத்தில் நல்லாட்சி அரசு தலையீடு



முஹம்மத் முஸம்மில்

■ அ.அருண் பிரசாந்த்

நீதித்துறையின் சுயாதீனத்தில் நல்லாட்சி அரசு தலையிடுகின்றது எனும் சந்தேகம் தற்போது பரவலாக எழுந்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளரான மொஹமட் முஸம்மில் நேற்று கருத்து வெளியிட்டார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில்

07 »»»»

## யாழில் 17 பாதாள குழுக்கள்

புலனாய்வு பிரிவு

யாழ்ப்பாணத்தில் 17 பாதாள உலகக் குழுவினர் செயற்பட்டு வருவதாக பொலிஸ் புலனாய்வுத் துறை அறிவித்துள்ளது.

இதில், அதிகமான குழுக்கள் கூர்மையான ஆயுதங்களைக் கொண்டு செயற்பட்டு வருவது

07 »»»»

## திருமலை என்ணெய் குத உடன்படிக்கையை மீளப் பெறவும்

### கோப் குழு அரசுக்கு பரிந்துரை



■ அ.அருண் பிரசாந்த்

திருகோணமலையிலுள்ள எண்ணெய் தாங்கிகளை இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கும் உடன்படிக்கையை மீளப்பெறுமாறு கோப் குழு பரிந்துரைத்துள்ளது.

அத்தோடு, இதுதொடர்பில் அமைச்சு மட்டத்தில் அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளதாகவும் அக்குழு தெரிவித்துள்ளது.

திருகோணமலை, எண்ணெய்த் தாங்கிகளை

07 »»»»

## ஹபரகட - ரனால நீர் வழங்கல் விஸ்தரிப்பு திட்டம் திறந்து வைப்பு



நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை இணைந்து செயற்படுத்திய ஹபரகட - ரனால நீர் வழங்கல் விஸ்தரிப்பு திட்டத்தை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் அழைப்பின்பேரில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பிரதம அதிதியாக கலந்துகொண்டு மக்களின் பாவனைக்காக திறந்து வைத்தார். 167 மில்லியன் ரூபா செலவில் விஸ்தரிக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் 10 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள 1500 குடும்பங்கள் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இராஜாங்க அமைச்சர் ஏ.எச். எம். பௌசி, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் கே.ஏ. அன்சார், அரசியல் பிரமுகர்கள் மற்றும் உயரதிகாரிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## தகவலறியும் சட்டமூலம்

# அரச ஊழியர்கள் வெளிப்படை தன்மை பேண வேண்டும்

( எஸ். அஷ்ரப்கான் )

தகவலறியும் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், அரச காரியாலயங்களும் உத்தியோகத்தர்களும் வெளிப்படைத்தன்மையுடன் பணியாற்ற வேண்டியுள்ளது என சாய்ந்தமருது உதவிப்பிரதேச செயலாளர் ஐ.எம்.றிகாஸ் தெரிவித்தார்.

நாட்டின் 69வது சுதந்திர தின நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக வளாகத்தில் (04) சனிக்கிழமை உதவிப் பிரதேச செயலாளர் ஐ.எம்.றிகாஸ் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது உதவிப்பிரதேச செயலாளர் தேசியக் கொடியேற்றி வைத்து உத்தியோகத்தர்களின் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கணக்காளர் ஏ.எல்.நஜிமுதீன், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜஃபர், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம், நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.வாஹிட், கிராம சேவக நிர்வாக உத்தியோகத்தர் எம்.நளீர், நிதி உதவியாளர் யூ.எல். எம்.ஹனீபா, பிரதம முகாமைத்துவ உதவியாளர்களான ஏ.சீ.எம்.பளீல், எம்.ஏ.றசீட், சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.நஜிபர், சமுர்த்தி உதவி முகாமையாளர்களான றியாத் ஏ. மஜீத், எம்.எம்.எம்.முபாறக், எம்.யூ.ஹில்மி உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அங்கு அவர் உரையாற்று கையில்,

இன்று நாட்டில் தகவலறியும் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இது பற்றிய அறிவூட்டல்கள் உத்தியோகத்தர்களுக்கு இடம்பெறவுள்ளது. மேலும், அரச காரியாலங்களிலுள்ள தகவல்களை பொது மக்கள் கோருமிடத்து, அதனை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் இச் சட்ட மூலத்தில் உள்ளடங்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்காலத்தில் அரச காரியாலயங்களும் உத்தியோகத்தர்களும் வெளிப்படைத்தன்மையுடன் பணியாற்ற வேண்டியுள்ளது. நல்லாட்சி அரசாங்கம் இவ்வாண்டினை வறுமையொழிப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதற்கமைவாக சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயற்படவுள்ளது. இதன் பிற்பாடு அரசாங்கம் நிவாரணம் பெறும் குடும்பங்களிலிருந்து இவ்வருடம் 10 சத வீதமானவர்களை நிவாரணத் திட்டத்திலிருந்து நீக்கவுள்ளது. அரச உத்தியோகத்தர்கள் தேசப்பற்றுள்ளவர்களாக நாட்டின் அபிவிருத்திற்கும் மக்களின் சேவைக்கும் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். காரியாலங்களுக்கு சேவையினைப் பெற வரும் பொது மக்களின் பணிகளை உத்தியோகத்தர்கள் கால தாமதமின்றிச் செய்து கொடுக்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகள் எமது பிரதேச செயலகத்தில் செய்யப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

## பொத்துவில் பிரதேசத்தில் சுற்றுலா பிரச்சினைகளுக்கு தீர்வு




(எம்.எஸ். சம்சுல் ஹுதா, பொத்துவில்)

பொத்துவில் பிரதேசத்தில் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய பிரச்சினைகளை ஆராய்வதற்கான அமர்வு அண்மையில் பொத்துவில் பசிபிக் ஹோட்டலின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சுகாதார பிரதியமைச்சர் பைசால் காசிமின் வேண்டுகோளிற்கு இணங்க இந்நிகழ்வில் காணி சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ மத விவகாரங்களுக்கான அமைச்சர் ஜோன் அமரதுங்க சிறு உற்பத்திகளுக்கான அமைச்சர் தயா கமகே சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் மேலதிக செயலாளர் உட்பட பொத்துவில் பிரதேச செயலாளர் முசார்ரத் பொத்துவில் பிரதேசத்தில் சுற்றுலாத் துறையுடன் ஒன்றிணைந்த சகல துறை சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

சுற்றுலாத்துறை எதிர்நோக்குகின்ற சமகால சவால்கள் பற்றிய கலந்துரையாடல்கள் நடைபெற்று தீர்வுகளும் காணப்பட்டன இன்னும் சில பிரதான பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளிற்கான உபாயங்களும் வரையப்பட்டன. கழிவு நீரை உல்லாசப்பயண விடுதிகளில் இருந்து அகற்றுவதற்கான கலி சக்காருடன் கூடிய பௌசர் இரண்டு உடனடியாக பொத்துவில் பிரதேச சபைக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அறுகம்பை பிரதேசத்தில் உள்ள வீதியோர வடிகான்களிற்கு மூடிகள் அமைக்கும் பணியை உடனடியாக ஆரம்பிக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபை சார்பாக கலந்து கொண்ட அதிகாரி பணிக்கப்பட்டார்.

பொத்துவில் அறுகம்பை தொடக்கம் பசறிச்சேனை வரையான வீதிகளின் இரு மருங்கிலும் உடனடியாக தெருவிளக்குகள் பொருத்தப்பட நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபையினை கேட்டுக்கொள்ளப்பட்டது. இதற்கான நிதியினை பெற்றுத்தருவதாகவும் வாக்களிக்கப்பட்டது.

சுற்றுலாப்பயணிகள் திடீரென சுகவீனமடையும்போது அவர்களை பொத்துவில் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்வதற்காக ஒரு நோயாளர் காவு வண்டியும் பெற்றுத்தரப்படும் என்றும் அது பொத்துவில் பொலிஸில் நிறுத்தப்பட்டிருக்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இது தவிர இப்பகுதி பொதுமக்கள் உல்லாசப்பயணிகள் மூலம் பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்டு தமது வருமானத்தை அதிகரிப்பதனூடாக நாட்டின் தேசிய வருமானத்தையும் அதிகரிக்க வாய்ப்பு கிட்டியிருக்கின்றது. இப்பிரதேசத்தில் வருடத்தில் ஆறுமாதத்திற்கு மட்டுமே உல்லாசப் பிரயாணிகள் வருகை தருகின்றனர். நாம் அதனை வருடம் முழுவதுமாக வரக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும் என அமைச்சர் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டார்.

## உதவிப் பிரதேச செயலாளராக அஹமட் நசீல் நியமனம்



(எம்.எஸ்.சம்சுல் ஹுதா,பொத்துவில்)

பொத்துவில் பிரதேச செயலகத்தில் நிலவிவந்த உதவிப் பிரதேச செயலாளர் வெற்றிடத்திற்கு அட்டாளைச்சேனையைச் சேர்ந்த எம்.ஏ.சீ.அஹமட் நசீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தில் 03 வருடங்கள் உதவிப் பணிப்பாளராக செயற்பட்ட இவர் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை தனது கடமைகளை பொத்துவில் பிரதேச செயலாளர் என்.எம்.எம்.முஸர்ரிடம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பொத்துவில் பிரதேச செயலகத்தில் கடந்த02 வருடங்களுக்கு மேலாக நிலவி வந்த உதவிப் பிரதேச செயலாளர் வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் நிருவாகஉத்தியோகத்தர் வெற்றிடமாகவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## பொத்துவில் பெரிய பள்ளிக்கு ஜெனரேட்டர் அன்பளிப்பு




(அட்டாளைச்சேனை நியாஸ் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெவ்வை 2016ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பொத்துவில் பெரிய ஜும்ஆ பள்ளிவாசலுக்கு ஜெனரேட்டர் ஒன்று வழங்கி வைக்கப்பட்டதுடன் பொத்துவில் ஜனாஸா நலன்புரி அமைப்பிற்கும் ரூபா 1இலட்சம் பெறுமதியான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான காசோலையும் பொத்துவில் பிரதேச செயலாளர் என்.எம்.எம்.முஸர்ரத் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெவ்வை, பொத்துவில் பிரதேச செயலாளர் என்.எம். எம்.முஸர்ரத், பொத்துவில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.நஸீல் அஹமட், தேசிய காங்கிரஸின் பொத்துவில் அமைப்பாளரும் முன்னாள் அமைச்சரும் ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் இணைப்பாளருமான ஏ.பதுர்கான், பொத்துவில் பெரிய ஜும்மாப்பள்ளி வாயல் தலைவர் செயலாளர், ஜனாசா நலன்புரி அமைப்பின் தலைவர் மௌலவி கே.அப்துல் அஸீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொத்துவில் பெரிய ஜும்மாப் பள்ளிவாயலுக்கு நீண்ட காலத் தேவையாக இருந்த ஜெனரேட்டர் தேவையை நிவர்த்தி செய்த கிழக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெவ்வைக்கு பெரிய பள்ளிவாசல் செயலாளர் எஸ்.உ.செனுலாப்தீன் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.

## தேக்கவத்தை மசாஜ் நிலையம் மூடப்பட்டது



வவுனியா தேக்கவத்தையில் ஆயுர்வேத மசாஜ் நிலையம் ஒன்று கலாசார சீர்கேட்டுடன் நடாத்தப்பட்டு வந்தது. இதனை கண்டித்து அப்பகுதி மக்களால் ஆர்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டதையடுத்து உடனே அவ்விடம் இடத்திற்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான கே. காதர் மஸ்தான் நகர சபை செயலாளரை ஸ்தலத்திற்கு அழைத்து உடனே நிலையத்தினை மூடுமாறு பணித்துள்ளார். இதனையடுத்து குறித்த மசாஜ் நிலையத்தினை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சப்ரகமுவ தமிழ் மொழி மூல 300 பட்டதாரி ஆசிரியர் வெற்றிடத்துக்கு விண்ணப்பித்தோர் 33 பேர்

(இரத்தினபுரி எம்.எல்.எஸ்.முஹம்மத்)

சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் கடந்த வருடம் தமிழ் மொழி மூல பட்டதாரி ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டது. இதற்கிணங்க சப்ரகமுவ மாகாண தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் நிலவிய 300 பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பில் விண்ணப்பித்தோர் எண்ணிக்கை 33 எனவும், பதவி நியமனம் பெற்றுக்கொண்டோர் எண்ணிக்கை 18 எனவும் சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சர் சட்டத்தரணி பானு முனுப்பிரிய தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தில் கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட சிறப்புமிக்க பாடசாலைகளுக்கு பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.சபரகமுவ மாகாண கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி வைபவம் அண்மையில் சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் கல்வி அமைச்சின் செயலாளரின் தலைமையில் இடம் பெற்றது.

சிறப்புமிக்க பாடசாலை வேலைத் திட்டத்தின் கீழ் சப்ரகமுவ மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 43இக்கும் அதிகமான சிங்கள ,தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளுக்கு நிழல் பிரதி இயந்திரங்கள் தொலைநகல் இயந்திரங்கள் , தளபாடங்கள் மற்றும் பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும் கல்வி அமைச்சினால் குறித்த பாடசாலைகளின் அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. தமிழ் மொழி இலங்கையின் அரச கரும நிர்வாக மொழிகளுள் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் மேற்படி வைபவம் தொடர்பில் தமிழ் ,முஸ்லிம் பாடசாலை அதிபர்களுக்கு மாகாண கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட அழைப்புக் கடிதங்கள் அனைத்தும் சிங்கள மொழியில் மாத்திரம் எழுதப்பட்டிருந்தமை தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்தனர் . இதே போன்று மேற்படி வைபவ நிகழ்ச்சி அறிவிப்புக்களும் முற்றாக தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டிருந்தமை தொடர்பிலும் பலரும் கவலை

## மின் நுகர்வோரின் காப்பு வைப்புப் பணத்திற்கு வட்டி

மின்சார நுகர்வோர் மின் இணைப்பின் போது செலுத்தும் காப்பு வைப்புப் பணத்திற்கு உரிய வட்டியினை கணக்கிட்டு ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் கடந்த வருட வட்டித் தொகையில் மாத மின் கட்டணத்திலிருந்து கழித்துக் கொள்வதற்கு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வழிகாட்டியுள்ளது.

வட்டியைப் பெற்றுக்கொள்வதில் நுகர்வோர் ஏதேனும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்குமிடத்து இலங்கை மின்சார சபை அல்லது லங்கா எலெக்ரிசிட்டி தனியார் நிறுவனம் ஆகியவற்றில் முறைப்பாடுகளை முன்வைக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 28ஆம் பிரிவின்படி, மின் இணைப்பைப் பெறும் போது நுகர்வோர் செலுத்திய காப்பு வைப்பு பணத்திற்கான ஒரு கொடுப்பனவைப் பெறுவதற்கு நுகர்வோர் உரிமை பெறுகின்றனர் என்ற அடிப்படையிலேயே இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மேற்படி வழிகாட்டலை வழங்கியுள்ளது.

## லம்கோ கழகத்துக்கு நிதி கையளிப்பு




சாய்ந்தமருது லம்கோ விளையாட்டு கழகத்திற்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட பொருளாளரும், யஹியாகான் பௌண்டேசன் அமைப்பினுடைய தலைவருமாகிய ஏ.சீ. யஹியாகானினால் காசோலை கையளிக்கப்பட்டது.

மேலும், விளையாட்டு கழகத்தினுடைய அங்கத்தவர்கள் ஏ.சீ. யஹியாகானைச் சந்தித்து விளையாட்டு வீரர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக எடுத்து கூறிய போது முதற்கட்டமாக அத்தியவசியமாக தேவைப்படுகின்ற விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக காசோலை கழகத்தினுடைய தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

# ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக செயற்பட விரைவில் சுயாதீன ஆணைக்குழு

## அமைச்சர் கயந்த கருணாதிலக

(இக்பால் அலி)

பொது மக்களுக்கு நியாயமான முறையில் செயற்படுவதற்கும் பிழையில்லாமல் உண்மையான செய்திகளை உரிய முறையில் பொது மக்கள் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் அதேவேளை ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் செயல்படுவதற்குமான வகையில் ஊடகத்துறைக்கு சுயாதீன ஆணைக்குழுவை நியமிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக ஊடகத்தறை அமைச்சர் ஜயந்த கருணாதிலக தெரிவித்தார்.

கண்டி தலதா மாளிகைக்கு நேற்று (5) விஜயம் செய்த பாராளுமன்ற மறு சீரமைப்பு மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் ஜயந்த கருணாதிலக ஊடகத்துறைக்கு சுயாதீன சுதந்திர ஆணைக்குழு அமைப்பது தொடர்பாகவும் மற்றும் இன்னும் சில வியங்கள் குறித்தும் கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்க தேரர்களிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் போதே இவ்வாறு மேற்கண்ட விடயத்தை தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

சுயாதீன சுதந்திர ஊடக ஆணைக்குழு முன்னெடுப்பது தொடர்பாகவும் மற்றும் சில விடயங்கள் மகா நாயக்க தேராகளின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளோம் அவாகளினது ஆசிர்வாதம் எமக்கு கிடைத்துள்ளது.

ஆகவே மக்களின் அபிலாஷைகளுக்கு கவனம் செலுத்தி செயற்பட்டு வருகின்றோம். எங்களுடைய அரசியல் இலாபத்திற்கு நாங்கள் எதுவும் செய்ய வில்லை. நாங்கள் எதிர்பார்ப்பது இது தொடர்பாக சமயத் தலைவர்கள், சாதாராண மக்கள், படித்தவர்கள், ஊடக அமைப்புக்கள், சிவில் அமைப்புகள் ஆகியவற்றின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளோம்.



விசேடமாக நாங்கள் எதிர்பார்ப்பது தீயை மூட்டும் ஊடகவியலாளர்களிடமிருந்தும் அவர்களினது கருத்துக்களையும் எதிர்பார்க்கின்றோம். நாங்கள் தொடர்ந்து ஊடகத் துறையைப் பாதுகாப்பதற்குத் தான் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுகின்றோம். இலத்திரனியல் ஊடவியலாளர்கள் எவ்வகையான நியதியான ஒழுங்குகளும் இல்லை. ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் அது பற்றி முறையிடுவதற்கோ பதிவதற்கோ ஒரு இடம் இல்லை. அதே போன்று இலத்திரனியல் ஊடகத்துக்கும் அவ்வாறானதொரு சந்தர்ப்பம் இல்லை. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கும் பொது மக்களுக்கும் நியாயமான முறையில் செயற்படுவதற்கும் பிழையில்லாமல் உண்மையான செய்திகளை உரிய முறையில் பெற்றுக் கொள்வதற்கும் ஊடகத்துறைக்கு சுயாதீன ஆணைக்குழுவை நியமித்து சுதந்திரமாக சிறந்த முன்னெடுத்துச் செல்வதற்காகத்தான் மாநாயகர் தேரர்களின் ஆசிர்வாதங்களைப் பெற்றுக் கொண்டுள்ளோம்.

தேவையான சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியிடம் பாராளுமன்ற அங்கிகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இன்றுள்ள நிலையைக் கருத்திற் கொண்டு ஜனாதிபதியும் பிரதமரும் கலந்துரையாடி தேவையான நேரத்தில் பிரேரணைகளை செய்ய முடியும். அவர்களுடைய முழு ஆதரவும் இருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். மேலும் அமைச்சருடன் அமைச்சின் செயலாளர், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர், தகவல் திணைக்கள பணிப்பாளர் உள்ளிட்ட பலர் அங்கு சமூகமளித்திருந்தனர்.

# நிதி மோசடி குழுக்களிடம் ஏமாற்றமடைய வேண்டாம்

## பொலிஸார் வேண்டுகோள்

நிதி மோசடிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் குழுக்களிடம் ஏமாற்றமடைய வேண்டாம் என பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தொலைத் தொடர்பு நிறுவணங்களினால் நடத்தப்படுகின்ற போட்டியில் வெற்றி பெற்றிருப்பதாக தெரிவித்து நிதி மோசடியில் ஈடுபடுவது தொடர்பான முறைப்பாடுகள் பல, கடந்த தினங்களில் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன.

கல்கிஸை விஷேட குற்ற விசாரணைப் பிரிவிற்கு கிடைத்த இதுபோன்ற முறைப்பாட்டு காரணமாக, பெண்ணொருவர் உட்பட மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொலைத்தொடர்பு நிறுவனங்களினால் நடத்தப்படுகின்ற போட்டியில் வெற்றி பெற்றிருப்பதாக தெரிவித்து பல்வேறு நபர்களிடம் 11 இலட்சத்து 76,000 ரூபா நிதி மோசடியில், இவர்கள் ஈடுபட்டிருப்பதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்கள் வெல்லம்பிட்டி, கொலன்னாவ மற்றும் மாவனல்லை பிரதேசங்களை சேர்ந்தவர்கள். மேலும் இவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

# ஆசிரியையிடம் தங்க சங்கிலி கொள்ளை

(வத்துகாமம் நிருபர்)

ஆசிரியை ஒருவரிடம் கூரிய கத்தியைக் காட்டி மிரட்டி சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியுள்ள தங்கச் சங்கிலியொன்று கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

குறித்த கொள்ளைச் சம்பவம் கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுகவெல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. வீடு ஒன்றில் புகுந்து ஒளிந்திருந்த சந்தேகநபர் குறித்த வீட்டில் வசிக்கும் ஆசிரியை வீடு திரும்பிய பின் கூரிய கத்தியைக் காட்டி மிரட்டி சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியுள்ள தங்கச் சங்கிலியை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கலகெதர பிரதேச பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் இவ் ஆசிரியை கடந்த வெள்ளிக் கிழமை 4 மணி அளவில் வீட்டுக்குள் செல்லும் போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதுகுறித்து கட்டுக்கஸ்தோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

# குடு ரொஷான் வெட்டிக் கொலை



பிரபல போதைப் பொருள் வர்த்தகரான தரங்கொடகே சாமர சந்தருவன் எனப் படும் குடு ரொஷான் நேற்று காலை வெட்டி கொலை செய்யப்பட்டார்.

பொரளை வனாத்தமுல்லை பிரதேசத்தில் உள்ள மைதானம் ஒன்றிற்கு அருகில் இக் கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டே அவர் கொலை செய்யப்பட்டிருப்பதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

வனாத்தமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய உயிரிழந்த குடு ரொஷான் பொரளை பிரதேசத்தில் போதைப்பொருள் வர்த்தகத்தை மேற்கொண்டு வந்துள்ளார் என பொலிஸாரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு இந்தக் கொலையின் சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்த விசாரணைகளை பொரளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.



முல்லைத்தீவு, கேப்பாபிலவு பிரதேசத்திற்கு கடந்த சனியன்று விஜயம் செய்த அமைச்சர் றிஷாத் பதியுதீன், அங்கு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த அப்பிரதேச மக்களை சந்தித்து அவர்களின் பிரச்சினையை கேட்டறிந்து, அதற்கான தீர்வு தொடர்பில் முல்லைத்தீவு அரசாங்க அதிபர், இராணுவம், விமானப்படை மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளுடனும் கலந்துரையாடியதோடு, ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அம்மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்குமாறும் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

# தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அறிவித்தல்

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தனிப்பட்ட அபேட்சகர்களாக தோற்றுவோர் பாடசாலைகளில் கல்வியை முடித்து பாடசாலையிலிருந்து விலகியதற்கான சான்றிதழையும் பெற்றிருக்க வேண்டும் என பரீட்சைகள் ஆணையாளர் டபில்யு.ஜே.என்.புஷ்பகுமார தெரிவித்தார்.

பாடசாலையிலிருந்துகொண்டு க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு பாடசாலையிலிருக்கும்போது பரீட்சைக்குத் தோற்றி யாராவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களது பெறுபேறு இரத்து செய்யப்படுவதோடு எதிர்காலத்தில் எந்தவொரு பரீட்சைக்கும் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

# ஆசிரியர் நியமனம் விரைவில்

நாட்டின் அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும் 10,022 ஆசிரியர் வெற்றிடங்களும் விரைவில் நிரப்பப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்தது.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக 1093 பட்டதாரிகளும் 1177 ஆரம்ப ஆசிரியர்களும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இது தவிர வடக்கு கிழக்கில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தோரையும், நிரந்தர ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

# முஸ்லிம்களுடன் இருந்த நல்ல உறவை குலைப்பதற்கு சிலர் சூழ்ச்சி



(இக்பால் அலி)

இந்நாட்டு முஸ்லிம்களோடு தனக்கு இருந்த நல்ல உறவை சிலர் சூழ்ச்சி செய்து குழப்ப முயற்சி செய்ததாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

முஸ்லிம் முற்போக்கு முன்னணி குருநாகல் மல்லவப்பிட்டி பிரதேசத்தில் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், எனக்கு தனிப்பட்ட ரீதியில் முஸ்லிம்களுடன் நல்ல உறவு இருந்தது. சில சக்திகள் அதனை குழப்பின. தற்போது நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக மறைமுகமாக பாரிய சூழ்ச்சி நடைபெறுகிறது. அதனை அறிந்த முஸ்லிம்கள் எம்மோடு கைகோர்த்துள்ளனர். இந்த அரசு ஐரோப்பிய ஏகாதியபத்தியவாதிகளின் நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றது. முஸ்லிம் நாடுகள் தற்போது இலங்கையுடன் நல்ல உறவு இல்லை. எமது ஆட்சியில் முஸ்லிம் நாடுகள் எமக்கு கை கொடுத்தன. நாம் அவர்களோடு நெருக்கமான உறவைப் பேணினோம். அதன் வெளிப்பாடாகவே பலஸ்தீனத்தில் உள்ள ஒரு வீதிக்கு எனது பெயரை சூட்டியுள்ளனர். வரப்போகும் எமது ஆட்சியில் முஸ்லிம்கள் தொடர்பில் விஷேட கவனம் எடுத்துக்கொள்ள நான் உறுதிபூணுகிறேன் என தெரிவித்தார்.

பேராசிரியர் பீரிஸ், ஏ.எச். எம்.அஸ்வர் ஆகியோரும் உரையாற்றினர்.

# எம்மை பார்த்து சிங்கப்பூர் முன்னேற்றம் நாம் உள்ளதையும் இழந்து நிற்கிறோம்

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி.



(அஷ்ரப். ஏ. சமத்)

எம்மைப் பார்த்து சிங்கப்பூர் இன்று வானுயர முன்னேறியிருகின்ற நிலையில் நாம் இன, மத, குல பேதங்களினால் பிரித்து உள்ளதையும் இழந்து நிற்கிறோம் என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

69ஆவது சுதந்திர தின நிகழ்வு கிரான்பாஸில் உள்ள ஜ.எஸ்.ஏ இஸ்லாமிய கல்வி நிறுவனத்தின் தலைவர் ஏ.ஆர்.எம் சபானின் தலைமையில் கொழும்பு கிராண்பாஸ் வாழும் வறிய குடும்பங்களுக்கு பாதணிகள் மற்றும் அப்பியாச புத்தகங்கள் வழங்கலும் சுதந்திர கொண்டாட்ட வைபவமும் கடந்த சனிக்கிழமை கிராண்பாஸ் விஜயபா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பிணர் முஜிபுர் ரஹ்மான் கலந்து கொண்டதுடன், முஸ்லிம் கவுன்சில் தலைவர் என். எம். அமீன், கிராண்பாஸ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரேமரத்தின விதானகே, விஜயபா வித்தியாலய அதிபர் வேரகம, விமலசேன தேரர் கலந்து கொண்டு சுதந்திரம் தினம் பற்றியும், கொழும்பு மத்திய பிரதேச வாழ் பெற்றோர்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் பற்றி விசேட சொற்பொழிவுகள் இடம் பெற்றன. நம் நாட்டில் என்ன தான் உள் பிரச்சினைகள் இருந்தாலும் முன்னாள் பிரதமர் டி.எஸ். சேனாநாயக்காவுடன் இணைந்து ஒரு நாட்டவர் என்ற ரீதியில் நாம் முதலில் வெள்ளையர்களிடம் இருந்து சுதந்திரத்தை பெற்ற பின் நமது உள்வீட்டுப் பிரச்சினைகளை பேசிக் கொள்வோம் என சமுகங்களின் தலைவர்களும் இணைந்து தான் நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுத்தந்தனர். அப்போது சிங்கப்பூர் பிரதமர் இலங்கை வந்தபோது எனது சிங்கப்பூரையும் ஒரு இலங்கைபோன்று மாற்றிக் காட்டுவேன் என்று சொன்னார். ஆனால் நாம் இன்னும் பின்தங்கியே இருக்கின்றோம். எமக்கு பின்னர் வந்த சிங்கப்பூர் தற்பொழுது எந்த அளவுக்கு அபிவிருத்தியில் முன்னேறியுள்ளது என தெரிவித்தார்.

# இலங்கையில் முஸ்லிம்களுக்காக நிறைய ஊடகங்கள் செயற்படுகின்றன



(சாஹுல் ஹமீத்)

இந்தியாவுடன் ஒப்பிடும்போது இலங்கையில் முஸ்லிம்களுக்காக நிறைய ஊடகங்கள் செயற்பட்டு வருகினறன. குறிப்பாக, இலங்கையில் வெளிவரும் நவமணி, விடிவெள்ளி பத்திரிகைகள் முஸ்லிம் சமூகத்தின் செய்திகளை வெளியிடுவதில் முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றன என தமிழ்நாட்டு அறிஞர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு ஜமால் முஹம்மத் கல்லூரியின் தமிழாய்வுத் துறை, இஸ்லாமிய இதழ்கள் பற்றிய நடாத்திய தேசிய கருத்தரங்கில், இவ்வாறு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஜமால் முஹம்மத் கல்லூரியி ஏற்பாடு செய்திருந்த, இஸ்லாமிய இதழ்கள் குறித்த தேசிய கருத்தரங்கு, இம்மாதம் முதலாம் திகதி தமிழ்நாடு திருச்சியில் நடைபெற்றது. இந்த கருத்தரங்கில் வெளியிடப்பட்ட ஆய்வு மலரில், இலங்கையர்களான நவமணி பத்திரிகை பிரதமர் ஆசிரியர் என்.எம். அமீன், மருதூர் ஏ. மஜீத், கவிஞர் ஜின்னாஹ் சரிபுதீன் ஆகியோரது ஆய்வுக் கட்டுரைகளும் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கப்பல் பாகிஸ்தானில்

இலங்கை கடற்படைக்குச் சொந்தமான ஆழ்கடல் ஆய்வு கப்பலான சமூத்திரா கப்பல் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள அமான் பயிற்சியில் பங்குகொள்வதற்காக கொழும்பு துறைமுகத்திலிருந்து பாகிஸ்தானுக்கு சென்றுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை சென்ற இக்கப்பல் எதிர்வரும் 9 ஆம் திகதி பாகிஸ்தான் கராச்சி துறைமுகத்தை சென்றடையும். இப்பயிற்சி எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை நடைபேறும்

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
06TH FEBRUARY 2017 - MONDAY

# நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்புக்கு கௌரவிப்பு

இலங்கையை ஆங்கிலேயர்கள் ஆண்டபோது, ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சி செய்ததனால், ஆங்கிலேயர்களால் தேசத்துரோகிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்ட 7 முஸ்லிம் தலைவர்களை, நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடிய முஸ்லிம் தலைவர்கள் என வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவுக்கு அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மீரா ஓசன் அவ்வக்கர் [ராய்மூனை], ஓசன் லெப்பை உதுமான் லெப்பை [ராய்மூனை], ஹவ்வக்கர் ஈஸா முகாந்திரம் [சம்மாந்துறை], அனீஸ் லெப்பை [மருதமுனை] ஆகியோரும், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சேகுதீதி [தோப்பூர்], சலாம்பதி உடையார் [குச்சவெளி], பீர்முஹம்மது ஆகியோரே, இவ்வாறு சுதந்திரத்துக்குப் போராடிய தலைவர்களாக பிரகடனப்படுத்தப்படவுள்ளனர்.

இந்த 7 முஸ்லிம் தலைவர்களும், ஆங்கிலேயர் காலத்தில் தேசத்துரோகிகளாக பிரகடனப்படுத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் செய்தி வெளியிட்டு, அவர்களை சுதந்திரப் போராளிகளிகளாக அறிவிக்க வேண்டும் என்று ஆசிரியர் தலையங்கம் எழுதிய நவமணி பத்திரிகை என்பதில் நாம் ஆனந்தமடைகின்றோம். அத்தோடு, இவ்விவகாரத்தை, ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுசென்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல். ஏம்.எம். ஹிஸ்புல்லாஹ்வும் நன்றிக்குரியவர்.

முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ள நிலையில், ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலங்கை வரலாற்றில், இந்த நாட்டின் ஒருமைப்பாட்டுக்காகவும், சுபீட்சத்துக்காகவும், சுதந்திரத்துக்காகவும் பெரும் தியாகங்களைச் செய்த முஸ்லிம் சமூகம், ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை மிகவும் ஆனந்தத்துடன் வரவேற்கின்றது.

முழு நாடும் 69ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடத் தயாராகியிருந்த வேலையிலேயே நாட்டுக்காக போராடிய இந்த ஏழு முஸ்லிம் வீரர்களுக்கும் சூட்டப்பட்டிருந்த தேசத்துரோகி பட்டத்தை அகற்றுமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் வரலாறு நெடுகிலும், இலங்கையின் முன்னேற்றத்துக்காக உழைத்த சமூகமே முஸ்லிம் சமூகமாகும். இலங்கை முஸ்லிம்கள் ஆரம்பகாலம் முதல் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்ததால், உள்நாட்டு வர்த்தகத்திலும், வெளிநாட்டு வர்த்தகத்திலும், இலங்கையை முன்னேற்றியவர்கள் முஸ்லிம்கள்தாம்.

இலங்கையின் கரையோரத்திலிருந்து, மீன் மற்றுமுண்டான உற்பத்திகளை மலைநாட்டுக்கு எடுத்துச் சென்ற முஸ்லிம்கள், மலைநாட்டிலிருந்து வாசனைத் திரவியங்களையும் மற்றுமுண்டான உற்பத்திகளையும் கரையோரத்துக்கு எடுத்து வந்தனர். இந்த வியாபார நடவடிக்கைகளின்போது, முஸ்லிம்கள் பயன்படுத்திய, போக்குவரத்து முறை தவளமுறை என்று வழங்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி, இலங்கையின் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த பணியையும் முஸ்லிம்கள் முன்னெடுத்தனர். இலங்கையின் உற்பத்திகள், ஆசிய, ஆபிரிக்க, அரபுநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

கண்டி மன்னர்களின் படைப்பிரிவுகளில் முஸ்லிம்கள் சிப்பாய்களாகவும், தளபதிகளாகவும் பணிபுரிந்தனர். மன்னர்களின் வைத்தியர்களாக முஸ்லிம்களே பணியாற்றினர். இந்த வைத்தியர்கள் ஹகீம் என்ற பொதுப்பெயர்கொண்டு அழைக்கப்பட்டனர்.

வெளிநாட்டவர் இலங்கையை ஆக்கிரமிக்கவந்த போதெல்லாம், இலங்கை முஸ்லிம்கள் இலங்கை மன்னர்களுடன் இணைந்து, வெளிநாட்டவருக்கு எதிராக போரிட்டனர். இதனால்தான், போர்த்துக்கேயர் கொழும்பை ஆக்கிரமித்தபோது, முஸ்லிம்கள் சொல்லொணாத் துயருக்கு உள்ளாகி, கொழும்பிலிருந்து துரத்தப்பட்டனர். இவ்வாறு இலங்கை முஸ்லிம்களின் தேசப்பங்களிப்பை அடுக்கிக்கொண்டே போகலாம்.

எனினும், துரதிஷ்டவசமாக, ஆங்கிலேயரின் காலப்பகுதியில் அவர்களின் திட்டமிட்ட பிரித்தாளும் கொள்கைகளாலும், பேரினவாத சிந்தனையாலும், இலங்கை மக்களுக்கு மத்தியில் முரண்பாடுகளும், பிளவுகளும் வலுத்தன. 1915 சிங்கள- முஸ்லிம் கலவரம் இந்த நாடு எதிர்கொண்ட மிக மோசமான கலவராகும்.

சமகாலத்திலும், முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரப்படுகின்றபோதும், அதனை முஸ்லிம்கள் மிகவும் புத்திசாதுர்யமாக எதிர்கொண்டு வருகின்றமை சந்தோசமளிக்கின்றது. அதேநேரம், ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு, முஸ்லிம்களின் வரலாற்றை மீண்டுமொருமுறை சீர்தூக்கி, இந்த நாட்டு மக்களுக்கு நினைவுபடுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. முஸ்லிம்கள் அதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

---

# எரிகின்ற காஷ்மீரின் ஒரு காட்சி

மலிக் முஹம்மத் அஸ்ரப்

**நேற்று (05) அனுஷ்டிக்கப்பட்ட காஷ்மீர் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது**



கடந்து நான்கு மாதங்களும் காஷ்மீரின் வரலாற்றிலே முன்னெப்போதுமில்லாத வகையிலான போராட்டத்திற்கு சான்று பகர்ந்துள்ளன. காஷ்மீர்; வெளியில் சுமார் 140 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 20000 பேர் இரக்கமற்ற இந்திய ஆயுதப்படைகளால் நசுக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் சிறுவர்களும், இளைஞர்களுமே அதிகமானவர்களாவர். இந்திய படைகளால் பயன்படுத்தப்பட்ட உருண்டை துப்பாக்கிகளின் மூலம் 1600 அதிகமான காஷ்மீரிகளின் முகங்கள்; சேதப்படுத்தப்பட்டதுடன், 1100 மேற்பட்டவர்கள் தமது கண் பார்வையினை இழந்து 2016 ம் ஆண்டினை மரண அவலம் நிறைந்ததாக கடந்துள்ளனர்.

இறந்த இளைஞர்களில் 11 வயதையுடைய நஸீர் ஸாபி காஷி, 12 வயதையுடைய டேனிஸ் சுல்தான், மற்றும் 13 வயதையுடைய ஜினைத் அஹமட் ஆகியோர் அடங்குகின்றனர். காஸ்மீர் இளைஞர்கள், உட்பட எட்டு வயதுடைய சிறுவர்களும் வீதியிலிறங்கி இந்திய படைகளின் மீது கற்களை எறிவது பொது நிகழ்வாக மாறிவிட்டதுடன், விடுதலை என்ற கோஷம் காஷ்மீரின் அனைத்து எல்லைகளிலும் எதிரொலித்திருக்கின்றது. காஷ்மீர் வெளியின் அனைத்து பகுதிகளின் நடவடிக்கைளை முடக்கும் விதமாக கடந்த நான்கு மாதங்களாக தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்நீண்ட அடக்குமுறை தவிர்த்து இந்திய ஆக்கிரமிப்பு காஷ்மீரின் அனைத்து தொடர்பாடல் அலைவரிசைகளும் இந்திய அரசினால் துண்டிக்கப்பட்டு ஊடகங்கள் இருட்டடிக்கப்பட்டன.

ஊடகங்கள் மீதான இத்தடையானது கடைசி 72 நாட்கள் வரை நீடித்த ஊரடங்கு உட்பட அனைத்து விதமான ஊரடங்கு பதிவுகளையும் அழித்துவிட்டது. மிகப்பாரியளவில் இடம்பெற்ற காயப்படுத்தல்கள் மட்டும் கொலைகள் தவிர, எவ்வித குற்றச்சாட்டுமில்லாமல் யாரும் கைது செய்யப்படலாம் என்ற விசேட சட்டத்தின் மூலம் 10000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது தவிர 1500 பேர் இன்றுவரை சிறையில் அடைக்கப்பட்டுள்ளதுடன், கடைசி மூன்று மாதங்களில் 2400 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளமையானது அடக்குமுறையின் உச்சமாகும். இக்கொடூர அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் இளைஞர்களின் விடுதலைப்போராட்டம் தொடர்ந்தும் புதுஉத்வேகத்ததுடன் விரிவடைந்து வருவதுடன், அயராத காஷ்மீர் இளைஞர்கள் சுதந்திரத்திற்காக தங்களது உயிர்களை தியாகம் செய்கின்றமையினை, சர்வதேச சமூகம் அறியாதிருக்கின்றமை வருந்தத்தக்கது. இளைஞர்களின் இச்சுதந்திர போராட்டம் பல தசாப்தங்களாக தொடர்கின்ற போதிலும் இம்முறை அது முற்றிலும் மாறுபட்டிருந்தது.

இப்போராட்டத்தின் முக்கியமான அம்சம்யாதெனில் வெறுமனே நகர் பகுதிகளையும் தாண்டி தெற்கு காஷ்மீர் கிராமங்களிலும்; இப்போராட்டம் எதிரொலித்திருந்தது. காஷ்மீர் மக்களை கட்டுப்படுத்துவதற்கும், அடிபணியவைப்பதற்கும், இந்தியா தன்னால் இயன்ற அனைத்து கொடூர ஆயுதத்தினையும் பயன்படுத்தியுள்ளது என்பதனை அதிகரிக்கும் போராட்டங்கள் நினைவூட்டுகின்றன. அண்மையில்; இடம்பெற்ற போராட்டமானது காஷ்மீர் இளைஞர்கள் தங்களது சுயநிர்ணய உரிமை போராட்டத்தினை அடுத்தகட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர் என்பதனை தெளிவாக்குவதுடன், அது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. இந்தியாவின் இரக்கமற்ற ஆயுதப்படைகளுக்கெதிரான சுதந்திர போராட்டத்தில் இது ஓர் பொற்காலமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

காஷ்மீர் மக்களின் சுதந்திர போராட்டமானது இந்திய ஆயுதப்படைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற கொடூரங்களிற்கெதிரான இயற்கையான எதிர்விளைவாக காணப்படுவதுடன், இவ்இயக்கமானது உள்நாட்டிலே தன்னிச்சையாக உருவாக்கப்பட்டதொன்றாகும். இந்திய அரசாங்கம் இவ்வாறான போராட்டங்களை சர்வதேச சமூகத்தின் பார்வையினை திசைத்திருப்புவதற்காக தீவிரவாதம் என வரைவிலக்கணம் செய்து உலகினை அச்சுறுத்துகின்றது. காஷ்மீரின் சுதந்திர போராட்டம் அதிகமான படைக்குவிப்பின் கட்டுப்பாட்டினை மீறியுள்ளமையானது, இந்திய தலைமைகள் மத்தியில் பெரும் அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய இந்திய ஆளும் கட்சியான பாரதி ஜனதா கட்சியின் அரசாங்கமானது, ஊடகவியலாளர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் போலவே எதிர்க்கட்சியிடமிருந்தும் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளது. புது டில்லி காஷ்மீர் மக்களுக்கு நியாயமான தீர்வினை வழங்குவதினை விடுத்து, அரசின் வலிமையினை விரிவுபடுத்திக் கொள்ளும் நோக்கில் இப்போராட்டங்களுக்கு அடக்குமுறைகளூடாக பதிலளிக்க விரும்புகின்றது. பாகிஸ்தான் காஷ்மீர் மக்களின் சுய-நிர்ணய உரிமை போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கவனம்செலுத்துகின்றது என்பதனால், இந்தியா, ஆஸாத் மற்றும் ஜம்மு காஷ்மீர் எல்லைகளில் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு தீவிரவாதத்தினை கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

---

# நபிகளார் காட்டித்தந்த அந்நிய சமூகத்துடனான சகவாழ்வு



இ.ச.நிஜாம் செரீப்
கொழும்பு - 12

*(கடந்த வாரத் தொடர்ச்சி...)*

அடிமையான 'ஸைது இப்னு ஹாரிஸ்' 'உக்காள்' சந்தையில் விற்கப்பட்டார்கள். 'ஹக்கீம் இப்னு ஹஸ்லம்' அவரை 400 திர்ஹம்களுக்கு வாங்கி கதீஜா (ரலி) யிடம் கொடுத்தார்கள். அவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு 'ஸைது இப்னுஹாரிஸ்' அவர்களை ஒப்படைத்தார்கள். அவரை அடிமைத்தளையிலிருந்து நீக்கி, முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் விடுவித்தார்கள்.

'ஸைது இப்னு ஹாரிஸ்' அவர்களை, அடிமைத்தளையிலிருந்து மீட்டி எடுப்பதற்கு அவரது தந்தை ஹாரீஸ் பொன்னையும் பொருட்களையும் எடுத்துக் கொண்டு வந்தார். மகன் 'ஸைது' தனது தந்தையுடன் போகமறுத்து விட்டார்கள்.

ரமழான் மாதம் திங்கட்கிழமை, ஹிரா குகையில் இருக்கும்போது, நபிகளார் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு ஜிப்ரீல் (அலை) மூலம் வஹி அறிவிக்கப்பட்டது. வாசிப்பீராக என்று அசரீரி கேட்டது. எனக்கு வாசிக்கத் தெரியாது என்று நபிகளார் முஹம்மத் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். ஜிப்ரீல் (அலை), நபிகளாரை மார்போடு அணைத்து வாசிப்பீராக என்று கூறினார்கள். நபிகளார் மீண்டும் ஓதத் தெரியாது என்றார்கள்.

அப்போது, ஜிப்ரீல் (அலை) அரபு மொழியில், இக்ரஃ என்று அல்குர்ஆன் ஆயத்தை சொல்லிக்கொடுத்தார்கள். இதன் பின்னர், 23 வருடங்கள் அல்குர்ஆன் சிறுகச் சிறுக இறங்கியது.

அல்குர்ஆனின் முதல் வசனம் இறங்கியதன் பின்னர் நபியவர்களுக்கு நடுக்கமும் காய்ச்சலும் ஏற்பட்டது. கதீஜா (ரலி), சிறிய தந்தையின் மகனான வரகா இப்னு நௌபல் என்ற கிறிஸ்தவ மதபோதகரிடம் அழைத்துச் சென்றார்கள். அப்போது அந்த கிறிஸ்தவ மதபோதகர், பரிசுத்தமானது! பரிசுத்தமானது! மூஸா நபியவர்களிடம் வெளியான வேதத்தூதர் ஜிப்ரீல் (அலை) ஆவார். முஹம்மத் (ஸல்) இம்மக்களுக்கு நபியாக இருப்பார் என்று நவின்றார்கள்.

இந்த முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அந்நிய சமூகத்துடனான சகவாழ்வை பற்பல சந்தர்ப்பங்களில் பல்வேறு கோணங்களில் காட்டித் தந்தார்கள். அன்று அந்நியர்கள் நபிகளார் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு எதிராக கூச்சலிட்டார்கள். நிந்தித்தார்கள். கஃபாவுக்குச் சென்று வணங்க முடியாதவாறு தடுத்தார்கள். வழியில் நடந்து செல்லாதபடி முட்களைப் பரப்பினார்கள். நபிகளாரின் மேனியில் அசுத்தமான பொருட்களை எறிந்தார்கள். சிறுபிள்ளைகளையும் வம்பர்களையும் ஏவிவிட்டு நபிகளாருக்கு தொந்தரவு ஏற்படுத்துவார்கள்.

ஆனால், அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு கடும் தண்டனை வரக்கூடாது என்ற நன் நோக்கில் அந்நிய சமூகத்துடன் சகவாழ்வைப் பேணுவார் நம் நபிகளார். பெரிய செல்வந்தரான மக்கா குறைஷி தலைவர் உத்பா, முஹம்மத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அரேபியா முழுவதற்கும் உங்களை பெரிய செல்வந்தராக்கி விடுவேன். உங்களுக்கு சமமான செல்வந்தர் மக்காவில் இல்லாதளவுக்கு செல்வந்தராக்கி விடுகிறேன். அரேபியா நாடு முழுவதற்கும் தலைவராக்கி விடுகிறோம். அரேபியாவின் அரசராக்கி விடுகிறோம். மிக அழகிய பெண்ணை திருமணம் செய்துவைக்கிறோம். இவ்வகையான பேரின்பங்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், உங்கள் உடலில் கோளாறு இருக்கிறது. அதை எங்கள் செலவிலேயே சுகப்படுத்துவோம். என்று சொன்னார்கள்.

அந்நிய சமூகத்துக்கு நல்வாழ்வும் சகவாழ்வும் கிடைக்க வேண்டும் என்பதற்காக முற்று முழுதாக அதை ஏற்க மறுத்துவிட்டார்கள்.

தூது சென்ற அபுல் வலீத் (உத்பா) குறைஷி காபிர், முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஒரு மந்திரவாதி, மந்திரமோதி மக்களை மயக்கி வருகிறார் என்று கேள்விப்பட்டு, இரண்டு கைகளில் இரண்டு பஞ்சுத் துண்டுகளை எடுத்துக்கொண்டு சென்றார்கள். முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மந்திரவாதி, மந்திரமோதி மயக்கி விடுவார், அவ்வாறு மயக்கிவிடாமல் இரண்டு கைகளில் இருக்கும் பஞ்சுத்துண்டுகளால் எனது இரண்டு காதுகளையும் அடைத்துக்கொள்வேன் என்று சென்றவர், முஹம்மத் நபி (ஸல்) திருக்குர்ஆனை திருத்தமாகவும் வசீகரிக்கும் தோரணையிலும் ஓதுவதைக் கேட்டு மெய்மறந்து காதுகளில் பஞ்சுத் துண்டுகளை அடைக்க மறந்துவிட்டார். கலிமா சொல்லி இஸ்லாத்தை தழுவிக்கொண்டார். நபி முஹம்மத் (ஸல்) திருக்குர்ஆனை ஓதுவதன் மூலம் அந்நிய சமூகத்தினரை இஸ்லாத்துக்கு அழைத்து சகவாழ்வை தந்தார்கள்.

உற்சவம் நடைபெறும் இடங்களுக்கு சென்று போதனை செய்ததன் மூலம் அந்நியர்கள் இஸ்லாத்தை பின்பற்றினார்கள். அதனால் அவர்களுக்கு சகவாழ்வு கிடைத்தது.

பின்வருவம் வாக்குறுதி வாங்கப்பட்டு அந்நியர்களுக்கு சகவாழ்வு அளிக்கப்பட்டது.

1. நாங்கள் அல்லாஹுவுக்கு இணைவைக்கமாட்டோம்.
2. களவு விபச்சாரம் செய்ய மாட்டோம்
3. மக்களை கொல்லமாட்டோம்
4. அவதூறு சொல்லமாட்டோம்
5. நியாயமான காரியங்களில் நபியைப் பின்பற்றுவோம்
6. இன்ப துன்பங்களில் முஹம்மத் நபி (ஸல்) உடன் சேர்ந்திருப்போம்.

மக்காவை விட்டு மதீனாவுக்கு 'ஹிஜ்ரத்' போன போது அல்லாஹுவின் நாட்டப்படி ஒட்டகம் தங்கிய இடத்தில் பள்ளியைக் கட்டியதன் மூலம் மதீனா வாசிகளின் மனதில் துயரமும் துக்கமும் வராமல் சகவாழ்வளித்தார்கள்.

மக்கா நாட்டைத் துறந்து வந்த முஹாஜிரீன்களுக்கு, மதீனாவாசிகளான அன்ஸாரீன்களை ஒவ்வொருவராக ஒப்படைத்து சகவாழ்வைத் தந்தார்கள். விவசாயம் செய்யத் தெரியாத மக்கா வாசிகளுக்கு, மதீனாவாசிகள் விவசாயத்தில் கிடைக்கும் வருமானத்தில் பாதி கொடுத்ததன் மூலம் அந்நியருடன் சகவாழ்வு கிடைத்தது.

கறுப்பு இன அடிமையான பிலால் (ரலி) அவர்கள் அந்நியனாக இருந்து இஸ்லாத்தை தழுவிய பிலால் (ரலி) அவர்களுக்கு தொழுகைக்கு அழைப்பதற்கான தொழில்வாய்ப்பை அளித்தார்கள்.

பதுர் சண்டையில் கைதான அந்நியர்களுக்கு ரொட்டிகளைக் கொடுத்துவிட்டு முஸ்லிம்கள் ஈச்சப் பழத்தை சாப்பிட்டு தமது பசியை ஆற்றிக் கொண்டதன் மூலம் சகவாழ்வு அளிக்கப்பட்டது.

போரில் கைப்பற்றிய கைதிகளை மீட்பு பணம் கொடுத்து பெருமானார் (ஸல்) விடுதலை செய்வித்ததன் மூலம் அந்நியர்கள் சகவாழ்வைப் பெற்றுக் கொண்டார்கள்.

பதுருப் போரின் போது கைது செய்யப்பட்ட போர் வீரர்கள் 10 பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கப் பண்ணுவதன் மூலம் அந்நியர்கள் சகவாழ்வு பெற்றார்கள். திருக்குர்ஆன் - அத்தௌபா - பச்சாத்தாபம்

பகம் 10 அத்தியாயம் 9 வசனம் 6

(நபியே) 'இணைவைத்து வணங்குவோரில் எவனும் உம்மிடம் பாதுகாப்பைக் கோரினால் அல்லாஹ்வுடைய வசனங்களை அவன் செவியுறும் வரையில் அவனுக்கு அபயமளியுங்கள் (அவன் அதைச் செவியுற்றும் விஸ்வாசம் கொள்ளாவிட்டால்) அவனை, அவனுக்கு அபயமளிக்கும் வேறு இடத்துக்கு அனுப்பிவைப்பீராக! ஏனென்றால் நிச்சயமாக அவர்கள் அறிவில்லாத மக்களாக இருக்கின்றனர்.' அல்லாஹ்வின் கட்டளைப்படி முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்த அந்நிய சமூகத்துடனான சகவாழ்வு திருக்குர்ஆனின் திருத்தமான கட்டளைப்படி ஒரு தசமேனும் பிசகாது இருந்தது.

திருக்குர்ஆன்

பாகம் 10 அத்தியாயம் 8 வசனம் 61

'அவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்ந்தால் நீங்களும் அதன்பக்கம் சாயுங்கள்; அல்லாஹுவை நம்புங்கள். நிச்சயமாக அவன் செவியுறுவோனும் (யாவையும்) நன்கறிந்தோனுமாயிருக்கிறான்' என்ற அல்லாஹ்வின் ஆணைப்படி ஏவப்பட்ட, முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்கள் காட்டித்தந்த அந்நிய சமூகத்துடனான சகவாழ்வு ஓய்வு ஒழிவின்றி கூறிக்கொண்டே போகலாம். **(முற்றும்)**

## கல்வி அதிகாரி செயினுலாப்தீனின் கல்விப்பணி மகத்தானது

### அஸ்வர் அனுதாபம்

குருநாகல் மாவட்ட முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டுக்கு குறிப்பாக அஹதியாக் கல்வியின் வளர்ச்சிக்கும் மர்ஹூம் ஏ.எல்.எம். செயினுலாப்தீன் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது என முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

சனியன்று காலமான ஓய்வுபெற்ற கல்வி அதிகாரியும் அஹதியாப் பாடசாலையின் அகில இலங்கைப் பரிசோதகருமான ஏ.எல். செயினுல்ஆப்தீனின் மறைவு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இச்செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது. குருநாகல் மாவட்டத்தில் கல்வித் திணைக்களத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி உட்பட உயர் பதவிகளை வகித்த இவர், மாவட்ட முஸ்லிம்களது கல்வி மற்றும் சமூக, சமய வளர்ச்சிக்கு நிறைந்த பங்களிப்புச் செய்த ஒரு கல்விமானவார். கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் முழு நாட்டுக்கும் அஹதியாக் கல்வி போதனையை வழங்குவதில் முக்கிய பங்களிப்புச் செய்தார்.

# இந்த நாட்டில் விட்டுக் கொடுப்புடன் வாழ முடியாவிட்டால் 30 வருட பகைமை தொடரும்

## கல்முனை விகாராதிபதி ரண்முத்துகல சங்கரத்ன தேரர்



(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

இந்த நாட்டிலே வாழும் எல்லோரும் பெரும்பான்மை சிறுபான்மை என்று சிந்திக்காமல் சகலரும் சமத்துவமானவர்கள் என்று கருதி, விட்டுக் கொடுப்புடன் வாழ முடியாவிட்டால் துன்பம் தொடரும் என கல்முனை ஸ்ரீ சுபத்திராம மகா விகாராதிபதி ரண்முத்துகல சங்கரத்ன தேரர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண விஸ்வகர்ம பொற்றொழிலாளர் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளந்தண்டு வலி, பார்வைக் குறைபாடு உட்பட மற்றும் நோய்களுக்கான இலவச சிகிச்சை முகாமும் இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வும் நேற்று மட்டக்களப்பு மஹாஜன கல்லூரியில் இடம்பெற்றபோது அதிதியாகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

தொடர்ந்து அங்கு தமிழில் சிறப்பாக உரையாற்றிய அவர், வழமையாக எந்தவொரு நிகழ்வுகளிலும் பௌத்த மதத் தலைவருக்குத்தான் முன்னுரிமையளித்து உரையாற்றச் சொல்வார்கள்.

ஆனால், வழமைக்கு மாறாக இந்த நிகழ்விலே பௌத்த சமயத் தலைவராகிய எனக்கு நான்காவதுஇடம் கிடைத்ததையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். அதை ஒரு பிரச்சினையாக நான் எடுக்கவில்லை.

மற்ற மதத் தலைவர்கள் தமது உரையிலே என்ன கூறுகின்றார்கள் என்று அவதானித்து விட்டு உரையாற்ற எனக்குக் கிடைத்த இந்த நாலாவது இடம் என்பது எனக்கு நல்ல வாய்ப்பை அளித்திருப்பதால் இதை ஒரு சந்தர்ப்பமாக நான் கருதுகின்றேன்.

நாங்கள் இந்த நாட்டிலே விட்டுக் கொடுப்புடன் வாழ வேண்டும். மற்றவருக்கு உதவ வேண்டும் அவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும் நமது உன்னதமான அன்பை வெளிப்படுத்த வேண்டும். சிறுபான்மை பெரும்பான்மை என்று யாருமே சிந்திக்கக் கூடாது. ஒரு சிறந்த மனிதர்களாக நாம் மாறுவதோடு மற்றவர்களை அவ்வாறே மாற்ற வேண்டும்.

மற்றவர்களுக்கு அன்பையும் ஆதரவையும் கண்ணியத்தையும் வழங்க மறந்தால் கடந்த 30 வருடகால பகைமை உணர்வு இன்னமும் நீடிக்கும். அதற்கு நாம் வாய்ப்பளித்துவிடக் கூடாது. மட்டக்களப்பு சிவில் சமூகத் தலைவர் எஸ். மாமாங்கராஜா சமூக ஐக்கியத்திற்காகப் பாடுபடுவதால் அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். 2004ஆம் ஆண்டு நான் கல்முனை விகாராதிபதியாக பொறுப்பெடுத்த பொழுது எனக்கு தமிழ் தெரியாது. அங்கே தமிழ் பேசும் மக்கள் தங்களது பிரச்சினைகளைச் சொல்லும் போது அதிலே நான் உதவ வேண்டும் என்று என் மனம் ஏங்கியது. அதனால் முதலில் அவர்களது துயரங்களைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும் என்பதற்காக நான் தமிழைக் கற்றேன். எனக்கு தமிழர், முஸ்லிம் என்று பிரித்துப் பார்க்க முடியாது. அரச அதிகாரிகள் கருணையுள்ளத்தோடு பணிபுரிய வேண்டும். இந்த நாட்டு மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். நமது பண்பாடுகளை விழுமியங்களை மதத்தலைவர்கள் சொல்வதை விட வேறு யாரோ கூறுவதை மக்கள் நம்பக் கூடிய காலமாக இது மாறி விட்டது. மதத் தலைவர்கள் மதிப்பளிக்கப்பட வேண்டும் . ஜனாதிபதி மைத்திரியும் நல்லிணக்கம், ஒற்றுமை, சமாதானம், சமத்துவம், சகவாழ்வு போன்றவற்றை உருவாக்க வேண்டும் என்று அறைகூவல் விடுக்கின்றார். உண்மையில் அது சிறந்த அழைப்புத்தான். அதனை நாம் ஏற்றுக் கொண்டு சமாதானத்திற்காகப் பாடுபடுவோம்.

## சத்திரசிகிச்சை நிபுணர் ரவீந்திரனுக்கு பாராட்டு




(றியாஸ் இஸ்மாயில்)

கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணராக கடமையாற்றிய பீ.கே. ரவீந்திரன் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு இடம்மாறிச் செல்வதனையிட்டு சேவை நலன் பாராட்டு நிகழ்வு அண்மையில் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எப்.றகுமான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வைத்திய நிபுணர்களான ஏ.எம். றசீன், எம்.எம்.ஹபீழ், கண் வைத்தியர் எம்.எம்.ஏ.றிசாட், உளவள வைத்தியர் எம்.சறாப்தீன், தர முகாமைத்துவ கட்டுப்பாட்டு பொறுப்பதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் உள்ளிட்ட வைத்தியர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சத்திர சிகிச்சை நிபுணர் பீ.கே.ரவீந்திரன் கடந்த ஆறு வருடங்களாக சிறப்பாக கடமையாற்றி கல்முனை பிரதேச மக்களினதும், வைத்தியசாலை உத்தியோகத்தர்களினதும் நன்மதிப்பை பெற்றவர்.அவரின் சேவையினை பாராட்டி வைத்தியசாலை வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் நினைவுப் பரிசு வழங்கி, பொன்னாடை போர்த்தி, கவிதை மற்றும் வாழ்த்துப்பா பாடி கௌரவித்தனர். நிகழ்வில் விஷேடமாக வைத்திய அத்தியட்சகர் ஏ.எல். எப்.றகுமான் வைத்திய நிபுணர் ரவீந்திரன் மக்களுக்கும் வைத்தியசாலையின் வளர்ச்சிக்கும் ஆற்றிய உயரிய சேவைக்கு தங்க மோதிரம் அணிவித்து கௌரவித்தார்.

சத்திர சிகிச்சை நிபுணர் ரவீநதிரன் மாற்றலாகி செல்லும் இடத்திற்கு மருதமுனையைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர் எம்.எம்.சமீம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மத்திய மாகாணத்தில் 419 டெங்கு நோயாளர்கள்

(வத்துகாமம் நிருபர்)

2017 ஜனவரி மாதத்தில் மட்டும் மத்திய மாகாணத்தில் 419 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு வெலியிட்டுள்ள தகவல்களின் பிரகாரம் கண்டி மாவட்டத்தில் 250 நோயாளர்களும், மாத்தளை மாவட்டத்தில் 120 நோயார்களும், நுவரெலியா மாவட்டத்தில் 49 நோயாளிகளும் பதிவாகியுள்ளதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்காக விஷேட திட்டங்கள் அமுல்படுத்தப்பட உள்ளதாகவும் அப்பிரிவு மேலும்தெரிவித்துள்ளது.



அண்மையில் ஜிந்துப்பிட்டி நீதிராஜா வரவேற்பு மண்டபத்தில் கல்முனை சுப்பர் டியுனர்ஸ் இசைக்குழுவின் சுகமான ராகங்கள் திரை இசை நிகழ்ச்சியில் போது புரவலர் ஹாசிம் உமர் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் இசை அமைப்பாளர் எஸ்.சிவாவால் பாராட்டபட்ட முன்னாள் அமைச்சர் அதாஉல்லாவையும் வானொலி புகழ் நூர்ஜகான் மர்சூக் பாடுவதையும் படங்களில் காணலாம்.

## முன்வதுகொட ஜமாலியாவில் இல்ல விளையாட்டுப்போட்டி

(கம்பளை எம்.எம்.எம். ரம்ஸீன்)

தெனுவர கல்வி வலயத்திற்குட்பட்ட முன்வதுகொடை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று அதிபர் எஸ்.எல்.எம். அஜீர் தலைமையில் நடைபெறும்.

இதில் தொழிலதிபர் எம்.என். எம். பைசல் பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதிகளாக தெனுவர வலய கல்விப்பணிப்பாளர் திருமதி டபிள்யூ. எம்.சீ.வீரகோன் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் சீ.எம்.எம். மன்சூர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு அஸ்-சம்ஸ், அல் கமர், அந்நூர் ஆகிய இல்லங்களுக்கிடையில் பல்வேறு போட்டிகளும் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



மின்னேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுகஹாதமன முகையதீன் ஜும்ஆப்பள்ளிவாசல் பாதை இரு மரங்கில் கம்பிவேலி அமைக்கும் சிரமதான நிகழ்வு கிராமிய பொலிஸ் நடமாடும் பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் எச்.ஜயலத் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிவில் பாதுகாப்புக்குழுவினர் உட்பட பலர் கலந்துகொண்டனர். உப இன்ஸ்பெக்டர் ஜயலத் மற்றும் நம்பிக்கையாளர் சபையினர் கம்பிவேலி தூண் நடப்படும் போது எடுக்கப்பட்ட படம்.

( பொலன்னறுவை ஏ.றபீக்)

### கண்டி மாவட்ட பாடசாலைக்கருகில்

## போதை விற்பனை தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டுகோள்

(மொஹொமட் ஆஸிக்)

கண்டி மாவட்ட பாடசாலைகளில் தற்போது இடம்பெற்று வரும் விளையாட்டுப் போட்டிகளுக்கிடையில் பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருட்களை விற்பனை செய்யும் கும்பல் ஒன்று நடமாடுவதால் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று பொலிஸார் கேட்டுக் கொள்கின்றனர்.

விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் போது வெளியாட்கள் மற்றும் பழைய மாணவர்கள் பாடசாலை வளாகத்திற்கு உள்ளே பிரவேசிக்க தடை இல்லாததன் காரணமாக சில விசமிகள் போதைப் பொருட்களுடன் சென்று மாணவர்களுக்கு விற்பனை செய்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின்படி ஒரு பிரதான பாடசாலைக்கு அருகில் கேரள கஞ்சாவை வைத்திருந்த பழைய மாணவர் ஒருவரை கைது செய்து நடாத்திய விசாரணையின் போதே இத் தவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் தமது பிள்ளைகளைப் போதைப் பொருட்களில் இருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் கூடிய அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.



பாணந்துறை தொட்டவத்தை பெரிய பள்ளிவாசலில் வருடாந்த முஹியத்தீன் மௌலூத் மஜ்லிஸ் பள்ளிவாசல் பிரதம கதீப் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.டி.எம். இல்யாஸ் தலைமையில் இடம்பெற்றது. மௌலவி எம்.டி.எப் ரிப்கான் உவைஸ் ஹாஜி ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். **(எம்.எஸ்.எம். முன்தஸிர்)**

### நல்லாட்சி அரசில் பொலன்னறுவையில்

# பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

## மாகாணசபை உறுப்பினர் அன்சார்



(பொலன்னறுவை நிருபர் ஏ. றபீக்)

பொலன்னறுவை மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசின் மூலம் கிடைத்து வரும் பங்களிப்பு அளப்பரியது. இதன் காரணமாக தங்களது வீடுகளைத் திருத்தி அமைப்பதற்காக தேவைப்பட்ட சகல பொருட்களும் அரசினால் வழங்கப்பட்டு வருகின்றன. விதவைகள் மற்றும் பெண்கள் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேலைத் திட்டமொன்றை பிரதேச செயலகங்களினூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது என வடமத்திய மாகாண சபை உறுப்பினர் அல்ஹாஸ் எஸ்.எச்.எம். அன்சார் கூறினார்.

பொலன்னறுவை மாவட்டத்தில் பிரதேச செயலாளர் பிரிவுகள்தோறும் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சீமெந்து கூரைத்தகடுகள் உட்பட தமது வீடுகளைத் திருத்தியமைப்பதற்கான பல பொருட்கள் வடமத்திய மாகாண சபை நிதியொதுக்கீட்டிலிருந்து மாகாண சபை அமைச்சர்கள் உட்பட மாகாணசபை உறுப்பினர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

பல பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வீடுகளை திருத்தி அமைப்பதற்காக சீமெந்து பொதிகள், கூரைத்தகடுகள், கூரைசீட் உட்பட பல பொருட்கள் மாகாணசபை உறுப்பினர் எஸ்.எச். எம். அன்சாரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டிலிருந்து வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு அப்பியாசக் கொப்பிகள் மற்றும் முன்பள்ளி சிறார்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டன.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த மாகாண சபை உறுப்பினர் அன்சார்,

எமது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பல சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளதன் பலனாக அவர்களால் பல மாவட்டங்களில் பாரியளவிலான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பின்தங்கிய பிரதேசங்களில் பிரதான பாதைகள் உட்பட பல உள்வீதிகள் காபட் வீதிகளாக செப்பனிடப்பட்டு அப்பிரதேசங்களில் தற்போது பஸ்போக்குவரத்துச் சேவையும் இடம்பெறுகின்றது. அதேபோல் பல பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களின் நலன் கருதி பல அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டங்களில் கல்விவலய மட்டத்தில் கஷ்டப் பிரதேசங்களில் இயங்கிவரும் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல பாடசாலைகளில் இருமாடி பாடசாலைக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. வடமத்திய மாகாண கல்வி அமைச்சின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் பல பாடசாலைகளின் குறைபாடுகள் தேவைகள் தொடர்பாக அண்மையில் மேற்கொண்ட பரிசீலனை அறிக்கையின்படி இம்மாவட்டங்கிளல் உள்ள சகல பாடசாலைகளிலும் பாரிய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.





இலங்கையின் 69ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு இஸ்லாமிய சமய நிகழ்வை தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சும், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கொழும்பு பெரிய பள்ளிவாசலுடன் இணைந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்றுக் காலை (04) ஏற்பாடு செய்திருந்தன. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீமும் கௌரவ அதிதிகளாக அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், இம்ரான் மஹ்றூப், மேல்மாகாண சபை உறுப்பினர் பாயிஸ், இலங்கைக்கான ஈரான் இஸ்லாமியக் குடியரசின் பிரதிநிதிகள், அமைச்சின் செயலாளர் டி.ஜி.எம்.வி. ஹப்பு ஆராச்சி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஸமீல் உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகள், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் பாஹிம், கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள், அஹதியாப் பாடசாலைகளின் பிரதிநிதிகள், உலமாக்கள், கொழும்பு பெரிய பள்ளிவாசல் மத்ரஸா மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். (ஏ.எஸ்.எம்.ஜாவித்)





கண்டி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் 69ஆவது சுதந்திர தின நிகழ்வு கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் மாவட்ட செயலாளர் எச். எம். பி. ஹிட்டி சேகர தலைமையில் இடம்பெற்றது. மத்திய மாகாண ஆளுநர் நிலூகா ஏக்கநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். கண்டி உதவி இந்தியத் தூதுவலராயத்தின் தூதுவர் ராதா வெங்கட்ராமன்,மத்திய மாகாண சபை உறுப்பினாகளான முத்தலிப் ஹாஜியார், லாபிர் ஹாஜியார். ஹிதாயத் சத்தார், அரச மற்றும் முப்படைகளின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.
(குருநாகல் இக்பால் அலி)



69ஆவது சுதந்திர தின விழா வைபவம் கிண்ணியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கிண்ணியா எழில ரங்கு மைதானத்தில் ( 4) நடைபெற்றது. இந் நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் மாகாண சபை உறுப்பினருமான நஜீப் அப்துல் மஜீத் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.
(கிண்ணியா நிருபர் )






இலங்கையின் 69ஆவது சுதந்திர தின நிகழ்வு பொரளை அஹதிய்யா பாடசாலை அதிபர் சிப்லி ஹாசிம் தலைமையில் தெமட்டகொடை அல்ஹிஜ்ரா பாடசாலையில் நடைபெற்றபோது பிரதம அதிதியாக கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி மற்றும் கௌரவ அதிதியாக கலந்து கொண்ட சுயாதீன தொலைக்காட்சி சேவை முன்னாள் பணிப்பாளர் புரவலர் ஹாசிம் உமர் மற்றும் அதிபர் சிப்லி ஹாசிம் ஆகியோர்கள் தேசியக்கொடி ஏற்றுவதையும் கலந்து கொண்ட அஹதிய்யா பாடசாலை மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்
(படம்-ஏ.எஸ்.எம்.இர்ஷாத்)



ஸ்ரீலங்கா ஜமாஅதே இஸ்லாமி கல்குடா கிளை, ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் 'ரகிமு ஸ்ரீலங்கா' பிரிவும் இணைந்து இலங்கையின் 69ஆவது தந்திர தின நிகழ்வை ஓட்டமாவடி பெரிய பள்ளிவாசல் நடாத்தியது. சர்வமத தலைவர்கள் மற்றும் முப்படைகளின் பிரதானிகளும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (முஹம்மட் ராபித்)



கண்டி நகர் ஜம்மிய்யதுல் உலமா சபை மற்றும் பள்ளிவாசல்கள் சம்மேளனம் இணைந்து 69ஆவது சுதந்திர தின நிகழ்வை நடத்தியது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் நிலூகா ஏக்கநாயக கலந்து கொண்டு சிறப்பித்தார். இதில் கண்டி உதவி இந்தியத் தூதுவராயத்தின் தூதுவர் ராதா வெங்கட்ராமன், முப்படைகளின் உயர் அதிகாரிகள் உலமாக்கள், பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் நிருவாகிகள், அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதை இங்கு காணலாம். (குருநாகல் இக்பால் அலி)






மூதூர் நபால் டீன் நற்பணிமன்றம், மக்கள் அபிவிருத்தி ஒன்றியம், ஸலாமா இஸ்லாமிய நிலையம் உள்ளிட்ட அமைப்புக்கள் 69 ஆவது சுதந்திர தினத்தை அரச நிறுவனங்களோடு இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. மூதூரில் இடம்பெற்ற சுதந்திரதின கொண்டாட்டங்களின் போது பிடிக்கப்பட்ட படங்கள்.
(மூதூர் முறாசில்)





அம்பாறை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 69ஆவது சுதந்திர தின நிகழ்வு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் துசித்த பீ வனிகசிங்க தலைமையில் (4) அம்பாறை நகரத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆரம்பக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் தயா கமகே, பிரதி அமைச்சர் அனோமா கமகே, பாராளுமன்ற உறுப்பினர் சிறியானி விஜயவிக்ரம, கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை, மாகாண சபை உறுப்பினர் மஞ்சுள, சர்வமத தலைவர்கள் உட்பட அரச அதிகாரிகள், முப்படையினர். பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.





இலங்கையின் 69ஆவது சுதந்திர தினத்தையொட்டி அம்பாறை மாவட்ட நிந்தவூர் பிரதேச செயலக கட்டிடத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது பிரதேச செயலாளர் ஆர்.யூ. அத்துல் ஜலீல் தேசியக்கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினர். நினைவாக உதவி பிரதேச செயலாளர் ஆர். திரவியராஜ் மற்றும் கணக்காளர் ஆகியோரால் மரக்கன்று நடப்படுவதையும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டதனையும் படங்களில் காணலாம்.
(காரைதீவு நிருபர்)



## யாழில் 17...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரியவந்துள்ளது.

இந்த பாதாள உலகக் குழுவினர் கடந்த பல வருடங்களாக செயற்பட்டு வருவதாகவும், இவர்கள் தொடர்பில் 127 சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகள் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஆளும் கட்சி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ள நிலையிலேயே இன்றைய தினம் ஜனாதிபதி, அரச தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளார்.

இவ்வருடத்தில் முதலாவது தடவையாக ஆளும் கட்சியினருடன் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள ஜனாதிபதி சிறிசேன அரசுக்குள் நிலவுகின்ற கருத்து முரண்பாடுகள், அரசின் கொள்கை வகுப்புகள், உள்ளூராட்சித் தேர்தல் என்பன தொடர்பில் கருத்து வெளியிடவுள்ளார்.

அதேநேரம், நீண்ட காலமாக இழுபறி நிலையில் இருந்துவரும் புதிய அரசியலமைப்பை ஸ்தாபிக்கும் பணி குறித்தும் உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து கொள்ளவுள்ளார் என்று அரச தரப்பிலிருந்து கூறப்படுகின்றது.

அத்தோடு, புதிய அரசமைப்பு தொடர்பில் 6 உபகுழுக்களினாலும் வெளியிடப்பட்ட அறிக்கையை ஆராய்வதற்கு தமக்கு கால அவகாசம் தேவை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரால் கோரப்பட்டிருந்தது.

எனவே, நாளைய தினம் வழிநடத்தல் குழுக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் வழிநடத்தல் குழுக்களின் அறிக்கை குறித்த நிலைப்பாடு தெரியவரும் என்பதால், இன்றைய இக்கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பிலும் ஜனாதிபதி விசேட கவனம் எடுத்துக் கொள்வார் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## இடை நிறுத்தம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பசீர்சேகுதாவூக்கினை கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து இடைநிறுத்துவதற்கு ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

சுதந்திர தினத்தன்று மாலை தாருஸ்ஸலாமில்கட்சித்தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம்தலைமையில் நடைபெற்ற 90 பேர் உயர்பீடக் கூட்டத்திலே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.இத்தீர்மானத்தின் படி பசீர்சேகுதாவூத் தவிசாளர் பதவியிலிருந்து உடனடியாக அமுலாகும் வகையில் நீக்கப்படுவதோடு அவரது செயற்பாடுகள் குறித்து ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் என்றும் கட்சி முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். இத்தீர்மானம் எடுக்கப்படும் போது பசீர்சேகுதாவுத் கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கவில்லை.

சனியன்று இரவு 7மணியளிவில் கூடிய உயர் பீடத்தில்பெரும்பாலான அங்கத்தவர்களை கூட்டத்தில் வேறு விடயங்களைப் பேசுவதனை தவிர்த்து பசீர் சேகுதாவுத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தினர். தலைவர் ரவூப் ஹக்கீம் தவிசாளர் தனக்கு எதிராக மேற்கொண்டு வரும் பிரசாரங்கள் தன்னை பெரும் அசௌகரியத்துக்குள்ளாகியிருப்பதாகவும் இது தொடர்பாக தான் நடவடிக்கை எடுப்பதனை உயர்பீடமும் நடவடிக்கை எடுப்பதனை பற்றித் தீர்மானிக்க வேண்டும் எனத்தெரிவித்துள்ளார்.

கூட்ட நிகழ்ச்சிநிரலைஇடைநிறுத்தி விட்டுதவிசாளர் தொடர்பாக நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராயப்படவேண்டும் என அங்கத்தவர்கள் பலரும் வலியுறுத்திக் கூறியுள்ளார். கல்முனைமுன்னாள் மாநகர சபை உறுப்பினர் பிர்தௌஸ் வட்மேல்மாகாண சபை உறுப்பினர் நியாஸ்கிடிக்குமாகாண சபை உறுப்பினர் லாஹிர் உட்படபல உறுப்பினர்கள் தவிசாளருக்குஎதிராக நடவடிக்கை எடுப்பதன்அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர். சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் பேராளர் மகாநாட்டில் தீர்மானம்எடுப்பதன் மூலம் பேராளர் மகாநாட்டுக்கு எதிராக நீதிமன்றம் செல்வதனைத் தவிர்க்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அக்கூட்டத்தில் குறுக்கிட்ட அங்கத்தவர்கள் பலரும் அவர் செய்வதனைச் செய்யட்டும் அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள்விடுத்தார்.

இச்சந்தர்ப்பத்தில் தவிசாளர் பதவியிலிருந்துஇடைநிறுத்தப்படும். தீர்மானம் முன்வைக்கப்பட்ட போது கூட்டத்துக்கு பிரசன்னமாகியிருந்தவர்களுக்கு தம்கையைத் தூக்கி ஆதரவு தெரிவிக்குமாறு கேட்கப்பட்டது. செயலாளர் ஹசன் அலி தவிர்ந்த சகலரும் தம் கைகளை தூக்கி ஆதரவு தெரிவித்தார்.

பின்பு ஹசன்அலியும்தானும் கையை உயர்த்தி தானும் ஆதரவு தெரிவிப்பதாக தெரிவித்தனர்.

இப்பிரேரணை நிறைவேற்றத்துடன் கூட்டம் நிறைவுபெற்றது.இதேநேரம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேராளர் மகாநாடு எதிர்வரும்12 ஆம் திகதியும் அரசியல் உயர்பீடக் கூட்டம்11 ஆம்திகதி இரவும் கூடவுள்ளது.

## சைடமுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாரத்துக்குள் தேசிய மட்டத்தில் சட்ட ஆலோசனைகள் மற்றும் அரசியல் கட்சிகளுடனான கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

மருத்துவர்களை உருவாக்குவதில் சர்வதேச தரத்தை தீர்மானிப்பது ஐக்கிய இராச்சியத்தை தலைமையாகக் கொண்டு இயங்கிவரும் மருத்துவ கல்விக்கான உலக அமையமாகும். நாம் அவர்களின் வழிகாட்டல்களை சைட்டமுடன் ஒப்புநோக்கினோம். அவர்களின் வழிகாட்டல்களுக்கு முரணாகவே சைட்டம் அமைந்துள்ளது. அவர்கள் தரம் குறைந்த மருத்துவ கல்லூரிகளை அங்கீகரிப்பதில்லை. தரம் குறைந்த கல்லூரிகள் விடயத்தில் கவனம் செலுத்துவது அவர்களின் பொறுப்பாகும். இதுதொடர்பில் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர தீர்மானித்துள்ளோம். அதுதொடர்பான சட்ட ஆலோசனைகளையும் ஆராய்ந்து வருகின்றோம். இந்த வாரம் புதன் கிழமையளவில் இதுதொடர்பான முறைப்பாடொன்றையும் முன்வைக்கவுள்ளோம்.

## 3,482 ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கணிதம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கே இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மலையகப் பாடசாலைகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டினை கவனத்திற்கொண்டே ஓய்வுபெற்ற ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

## இடைநிறுத்தியமை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் தன்னை தவிசாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தியது தொடர்பாக அவர் நவமணிக்கு மேலும் தெரிவித்ததாவது,

எப்போது நடக்கும் என்று எதிர்பார்த்தது தான் நேற்று நடந்துள்ளது. கட்சியின் பேராளர் மாநாட்டுக்கும் கட்சியின் கட்டாய உயர்பீட கூட்டத்திற்கும் நானும் எனது ஆதரவாளர்களும் கலந்துகொள்வதைத் தவிர்ப்பதற்காகவே எனது பதவி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்தை ஆட்சேபித்து நீதிமன்றம் செல்வீர்களா? எனக் கேட்கப்பட்டபோது,

நஸீர் அஹமத் போன்று கட்சியை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி கட்சியை சிக்கலுக்குள்ளாக்க மாட்டேன். பதிலாக மக்கள் முன்சென்று நியாயத்துக்காகப் போராடுவேன்- என்றார்.

## நீதித் துறையின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி விவகாரத்தில் 21 மாணவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, நீதிபதி ஜி.எல். டொஸ்கியினால் அவர்கள் அனைவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

பொலிஸார் இவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கோரிக்கை விடுத்தும், மாணவர்கள் தொடர்பில் முறையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்ற பின்னர் தான் அவர்களுக்கு பிணையும் கிடைக்கப்பட்டது.

ஆனால், இதுவிடயம் தொடர்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தற்போது குறிப்பிட்டுள்ள கருத்து தான் எமக்கு சந்தேகத்தை எழுப்பியுள்ளது. அதாவது, மாணவர்களை விடுவிக்க வேண்டும் என்று தான் கேட்டுக்கொண்டதாக அவர் கூறியிருந்தார்.

இவ்வாறு நீதித்துறைக்கு பணிப்பு விடுக்க இவருக்கு உள்ள அதிகாரம் தான் என்ன? மாணவர்களை விடுவிக்க வேண்டும் என்று இவரால் எப்படி கூறமுடியும்? அப்படி நீதித்துறைக்கு பணிக்கவில்லையெனில் அவர் நாட்டு மக்களை ஏமாற்றும்பொருட்டு பொய்யான கருத்தொன்றையே வெளியிட்டுள்ளார்.

ஜனநாயகம் எனக் கூறிக்கொண்டு நீதித்துறையின் சுயாதீனத்தில் நல்லாட்சி அரசு தலையிட்டு வருகின்றமை இதன்மூலம் தெளிவாகின்றது. இது சிறிய விடயமாக தெரிந்தாலும், பின்னணியில் பாராதூரமான கருத்தொன்று மறைந்து காணப்படுகின்றது.

இந்த ஒரு விடயத்துக்கே நீதித்துறையில் இவ்வரசு நுழையுமாக இருந்தால், நாட்டில் இடம்பெறும் ஏனைய ஏதாவது ஒரு பெரிய விடயத்தில் எப்படியெல்லாம் இந்த அரசு தலையிடும்? அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர் ஒருவரினாலேயே அரசின் இந்தத் தன்மை தெரியவந்துள்ளமையால் எமக்கு தற்போது இந்த அரசு தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது என்றார்.

# ஐ.தே.க. கிழக்கு மாகாண அமைப்பாளராக இம்ரான் மஹ்ரூப்

கிழக்கு மாகாண தமிழ்,முஸ்லிம் பிரதேசங்களின் ஐ.தே.க. அமைப்பாளராக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். கடந்த வெள்ளியன்று, ஐ.தே.க. தலைமையகம் சிறிகொதவில், கட்சி செயலாளர் கபீர் ஹாசிமின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே, இத்தெரிவு இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்களை ஒருங்கிணைத்து கட்சியை மீளவும் கட்டியெழுப்புவது தொடர்பாகக் கூட்டப்பட்ட இக்கூட்டத்தில், கிழக்குமாகான ஐக்கியதேசியக் கட்சி முக்கியஸ்தர்கள், செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் கிழக்கு மாகாண தமிழ்,முஸ்லிம் பிரதேசங்களின் அமைப்பாளராக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் ஏற்கனவே திருகோணமலை மாவட்ட தவிசாளராகவும் முதூர், திருகோணமலை தொகுதி அமைப்பாளராகவும் கடமையாற்றிவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்குமாகாண மக்களின் பிரட்சினைகள் தொடர்பாக ஆராய சிறிகொத்தவில் அலுவலகம் ஒன்றை அமைத்து அவ்வலுவலகத்தின் ஊடாக கிழக்கு மக்களின் பிரட்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுகொடுப்பது எனவும் இக்கூடத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## நீதி மன்ற...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நிலையில், இந்த தீர்ப்பை எதிர்த்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மேல்முறையீட்டு வழக்கு தொடர்ந்துள்ளார்.

ஈராக், சிரியா, ஈரான், லிபியா, சூடான், சோமாலியா, யெமன் ஆகிய 7 முஸ்லிம் நாடுகளுக்கு சுவிசா? வழங்குவதை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் 3 மாதங்களுக்கு நிறுத்தி வைத்து உத்தரவு பிறப்பித்தார். அதற்கு அமெரிக்காவில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. நாட்டில் உள்ள சர்வதேச விமான நிலையங்களில் கூடி ஜனாதிபதி டிரம்புக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள். நேற்றுமுன்தினம் வொஷிங்டன், மியாமி மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைநகரங்களான லண்டன், பாரீஸ், பெர்லின், ஸ்டாக் கோம், பார்சிலோனா உள்ளிட்ட இடங்களிலும் போராட்டங்கள் நடைபெற்றன.

இந்நிலையில் டிரம்பின் விசா தடை உத்தரவுக்கு அமெரிக்கா முழுவதும் தற்காலிக தடை விதிக்கப்பட்டது. சியாட்டில் மத்திய நீதிமன்ற நீதிபதி ஜேம்ஸ் ரொபர்ட் அதற்கான உத்தரவை பிறப்பித்தார். இது டிரம்பின் அரசு அதிகாரத்துக்கு பின்னடைவாக கருதப்பட்டது. இதற்கிடையே, மத்திய நீதிமன்ற த்தின் தடை உத்தரவை எதிர்த்து அமெரிக்க அரசின் நீதித்துறை மேல் நீதிமன்றில் அப்பீல் செய்துள்ளது. மேலும் டிரம்ப், உள்துறை ஜோன் கெல்லி, வெளியுறவு துறை அமைச்சர் ரெஸ் டில்லர்சன் ஆகியோரும் சியாட்டில் மத்திய நீதிமன்ற தடை உத்தரவுக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளனர். அமெரிக்காவின் பாதுகாப்புக்காகத்தான் விசா வழங்க தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே அவசர வழக்காக விசாரித்து தடையை உடனே நீக்க வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தகவலறியும் ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரச அலுவலகத்தின் தகவல் அதிகாரி யார்? என்பதை பெயர், முகவரி, தொடர்பு இலக்கம், மின்னஞ்சலுடன் காட்சிப்படுத்துவதோடு, தகவல் பெறுநர் யாரிடம் மேன்முறையீடு செய்ய வேண்டும் என்பதையும் காட்சிப்படுத்த வேண்டும் என்றும் தகவல் அதிகாரியொன்று நியமிக்கப்படவில்லையென்றால் அலுவலகத்தின் தலைமை அதிகாரியே தகவல் வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொதுமக்கள் தகவல்களை வாய்மொழிமூலம், விண்ணப்பமொன்றை பூரணப்படுத்தி, மின்னஞ்சல் மூலமும் கேட்கலாம். தேவையான தகவலை சரியாகக் கேட்பது அவசியமாகும். அது பாதையொன்றாக இருந்தால் பாதையின் தரத்தை பரிசோதிப்பதா? ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட பணம் தொடர்பான விடயமா? என்பதை தெளிவாக கூறும் போது அதிகாரி அவற்றை வழங்க வேண்டும். தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய தடைசெய்யப்பட்டுள்ள தகவல்கள், குற்றவிசாரணைகள், வேறு யாராவது இரகசியமாக வழங்கிய தகவல் போன்ற தகவல்கள் வெளியிடப்படாது.

தகவல் அதிகாரி தகவலொன்றை வெளியிட மறுக்கும் போது திணைக்கள தலைமை அதிகாரியிடம் மேன்முறையீடு செய்யலாம். திணைக்கள தலைமை அதிகாரி மறுக்கும் போது தகவல் ஆணைக் குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம். அங்கும் மறுக்கப்படும்போது மேன்முறையீட்டு நீதிமன்றம் வரை சென்று மேன்முறையீடு செய்யலாம்.

பெற்றுக்கொண்ட தகவல்களை சட்டரீதியான விடயங்களுக்காக பிரபல்யப்படுத்தலாம். இன்னொரு சட்டத்தை பாதிக்கும் விதத்திலோ, இன்னொருவரைப் பாதிக்கும் விதத்திலோ தகவல்களை பயன்படுத்த முடியாது- என்றார்.

# உணவுப் பொதியின் விலை மீண்டும் உயர்வு

உணவுப் பொதியொன்றின் விலை 10 ரூபாய் அல்லது 15 ரூபாயினால் ?அதிகரிக்கப்படவுள்ளதாகஇ இலங்கை உணவக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பல பாகங்களிலும் தற்போது தேங்காய்ப் பற்றாக்குறை காணப்படுவதனால்இ தேங்காயின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே உணவுப் பொதியின் விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேவேளை தேங்காய் ஏற்றுமதியை உடனடி?யாக நிறுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ள அவர்இ அரசாங்க நிறுவனங்களின் ஊழியர்களுக்கு உணவுப் பொதியொன்றினைஇ 50 ரூபாய்க்கு வழங்க முடியாத நிலைமைக்குத் தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## திருமலை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கும் ஒப்பந்தம் 2003 ஆம் ஆண்டு இலங்கை அரசினால் கைச்சாத்திடப்பட்டது. இதில், 6 மாதங்களுக்குள் வரி வழங்கும் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனாலும், அவ்வாறானதொரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாததால், இந்திய நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட மேற்படி ஒப்பந்தமானது செல்லுபடியற்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே கோப் குழுத் தலைவரான ஜே.வி.பியின் சுனில் ஹந்துன்நெத்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் தாங்கிகளை இந்தியாவிற்கு குத்தகைக்கு வழங்கியமை தொடர்பிலான கணக்காய்வாளர் நாயகம் அறிக்கையொன்றைத் தயாரித்து சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சென்னையில் நடந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதிமுக சட்டமன்ற தலைவராக சசிகலாவின் பெயரை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் முன்மொழிந்தார்.

சென்னையில் நடந்த எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் சசிகலா முதலமைச்சராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் இராஜினாமா செய்துள்ளார். இராஜினாமா கடிதத்தை சசிகலாவிடம் கொடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தமிழக முதல்வராக சசிகலா எதிர்வரும் 7ஆம் அல்லது 9ஆம் திகதிகளில் பதவியேற்கவுள்ளார். சசிகலாவுக்கு ஆளுநர் வித்யாசாகர் ராவ் பதவி பிரமாணம் செய்து வைப்பார். சசிகலாவை புதிய முதல்வராக தேர்வு செய்தது பற்றி ஆளுநரிடம் அ.தி.மு.க. கடிதம் வழங்கவுள்ளனர்.

சசிகலாவின் வாழ்க்கை வரலாறு

தமிழக முதல்வராக பொறுப்பேற்கவுள்ள சசிகலா திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியைச் சேர்ந்தவர். 1976ஆம் ஆண்டு சசிகலா, நடராஜன் திருமணம் கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. மேலும் சசிகலாவுக்கு 1983இல் ஜெயலலிதாவின் அறிமுகம் கிடைத்தது. அதன் பின்னர் ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரிய தோழியாக சசிகலா இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாரடைப்பு

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்ற கலந்துரையாடலில் மாரடைப்பிற்கான மருந்து குறித்து இருதய வைத்திய நிபுணர்கள் சங்கத்தினர் தெளிவுபடுத்தியுள்ளனர்.

ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான குறித்த மருந்து வகையை குறைந்த விலையில் தருவிப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன இதன்போது குறிப்பிட்டார். இதற்கான பேச்சுக்களும் மிகவிரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

## திருத்தக் குழுவின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பரிந்துரை செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்சூப் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முன்னாள் நீதி மற்றும் சட்ட சீர்திருத்த அமைச்சர் கௌரவ. மிலிந்த மொரகொட அவர்களால் அமைச்சரவை அங்கீகாரத்துடன் 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம், 1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தினை ஆராய்வதற்கும் சீர்திருத்தங்களை பரிந்துரை செய்வதற்காகவும் நியமிக்கப்பட்ட குழு, சில பொது மக்கள் செய்திப் பத்திரிகை ஆக்கங்களிலும், சமூக ஊடகங்களிலும் தெரிவித்துள்ள சில அக்கறைகள் தொடர்பில், இந்த ஊடக அறிக்கையை வெளியிட தீர்மானித்துள்ளது.

இந்த குழு ஆராய்ந்து பரிந்துரை செய்யவுள்ள விடயங்களில் உள்ள மிகவும் உணர்வுபூர்வமான தன்மையை கருத்திற்கொண்டு, இந்தக்குழு ஆங்கில, தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களினூடாக பொது மக்களின் கருத்துக்களைக் கோரியது. தமது கருத்துக்களையும் பரிந்துரைகளையும் அனுப்பிய கௌரவ காதிகள், மார்க்க அறிஞர்கள், சட்டத்தரணிகள், புத்திஜீவிகள் மற்றும் ஆய்வாளர்கள் ஆகியோருக்குப் புறம்பாக முஸ்லிம் கவுன்ஸில் ஓஃப் ஸ்ரீலங்கா, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை, முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்கம், அகில இலங்கை முஸ்லிம் திருமண பதிவாளர்கள் சங்கம், இலங்கை காதி நீதிபதிகளின் மன்றம், முஸ்லிம் மாதர் ஆராய்ச்சி மற்றும் செயல் மன்றம், கண்டி மன்றம், காலி முஸ்லிம் கலாசார சங்கம் மற்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா ஆகிய பெயர் குறிப்பிடப்படக்கூடிய சில அமைப்புக்கள் தமது விரிவான கருத்துக்களை அனுப்பியிருந்தன.

பொதுமக்களிடமிருந்து நமக்கு கிடைத்த கருத்துக்களையும், முன்மொழிவுகளையும் ஆழமாக பரீட்சிப்பதற்கு அதிக காலம் எடுக்க வேண்டியேற்பட்டது. அத்தோடு, அதன் செயல்முறையை எளிதாக்குவதற்காக, இந்த கருத்துக்களை துலங்க வைக்கவும், உறுதிப்படுத்திக் கொள்ளவும் பல பொது அமர்வுகளையும் மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. இந்த நோக்கத்திற்காக இந்த குழுவானது அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பத்வாக் குழு, ஜாமிய்யா நளீமிய்யாவின் பணிப்பாளர் மற்றும் விரிவுரையாளர் குழு ஆகியவற்றுடன் பல கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது.

பொதுமக்களால் முகங்கொடுக்கப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அவர்களுடைய பல்வேறு அக்கறைகள் தொடர்பில் இஸ்லாமிய சட்டவியலின் (பிக்ஹ்) கோட்பாடுகள், இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் தகுந்த சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இக்குழுவானது ஆர்வத்துடன் ஆய்வு செய்ததுடன், நாட்டின் சட்டத்திற்கு இணங்க சமூக மற்றும் சட்ட சிக்கல்கள் தொடர்பில் தீர்வுகளை முன்வைப்பதற்கு விளைந்துள்ளது.

இக்குழுவானது, புனித அல்குர்ஆன், அல்ஹதீஸ், இஜ்மா, கியாஸ் ஆகியவற்றின் கோட்பாடுகளின் அடிப்படையில் காதி நீதிமன்ற முறைமையில் தொடர்புபடும் கணிசமான மற்றும் நடைமுறை ரீதியிலான சட்டங்கள் தொடர்பில் விரைவாகவும் தகுந்ததாகவும் கொண்டுவர வேண்டியுள்ள சீர்திருத்தங்கள் தொடர்பில் விளிப்புடைய திறமையான புத்திஜீவிகளையும், சிறந்த சட்டத்தரணிகளையும் ஏனைய தொழில்வான்மையாளர்ளையும் உள்ளடக்கிய புலமை வாய்ந்த நபர்களை கொண்டமைந்துள்ளது என்பதனை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இக்குழு தற்போது அதனது அறிக்கையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கையில் உள்ளதுடன், பாரியளவில் முஸ்லிம் சமூகத்திற்கு நன்மை பயக்கும் வகையில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தினை சீர்திருத்துவதற்கு, அதன் பரிந்துரைகளை வழங்குவதற்கு, ஒருங்கிணைந்த வகையில் இக்குழு செயற்படுகின்றது என்பதை உச்சளவு பொறுப்புணர்வுடன் பொதுமக்களுக்கு அறிவிக்க விரும்புகின்றது.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

## இலங்கை வீரர்களுக்கு புதிய நிபந்தனை



இலங்கை அணியின் கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் தம்மை அளவுக்கு மீறி அலங்காரம் செய்ய தடைவிதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய காது குத்துதல், தலைமுடிக்கு வர்ணம் தீட்டுதல், உள்ளிட்ட பேஷன் விடயங்களுக்கு தடைவிதிக்குமாறு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதுதொடர்பான அறிவித்தல் கிரிக்கெட் வீரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், கிரிக்கெட் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதற்கமைய இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் இருவர் மற்றும் வேகப்பந்துவீச்சாளர் ஒருவருக்கும் தலைமுடியின் நிறத்தை பழைய நிறத்துக்கே கொண்டுவருமாறு கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த கோரிக்கையானது வீரர்களின் ஒழுக்காற்று விடயங்களை பாதுகாப்பதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கை என்றும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பீட்டர்சன் விலகல்

இந்திய உள்ளூர் அணிகள் பங்கேற்று விளையாடும் ஐபிஎல் தொடரிலிருந்து இங்கிலாந்து நட்சத்திர துடுப்பாட்டக்காரர் கெவின் பீட்டர்சன் விலகியுள்ளார். 36 வயதான பீட்டர்சன் இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், இந்த முறை ஐபிஎல் ஏலத்தில் பங்கேற்கவில்லை. கடந்த சில மாதங்களாக பிக் பாஷ் லீக் உள்ளிட்ட போட்டிகளில் தொடர்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தேன். அதற்காக தொடர்ச்சியாக பயணம் மேற்கொண்டிருந்தேன். அதனால் வரும் ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறவுள்ள ஐபிஎல் போட்டியில் பங்கேற்கப் போவதில்லை என தெரிவித்துள்ளார். கடந்த ஐபிஎல் தொடரில் புனே அணியில் இடம்பெற்ற பீட்டர்சன் 4 ஆட்டங்களில் மட்டுமே விளையாடிய நிலையில் காயம் காரணமாக விலகியிருந்தார்.

## இலங்கை அணியை வீழ்த்தி தென்னாபிரிக்கா ஹெட்ரிக் வெற்றி



சுற்றுலா இலங்கை அணிக்கும், தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றியது. நேற்றுமுன்தினம் ஜொஹான்ஸ்பேர்க் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

நாணயச்'ழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. தொடக்க வீரர்களான டிக்வெல்லா மற்றும் தரங்கா நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தனர். இருவரும் முதல் விக்கெட்டிற்கு 60 ஓட்டங்கள் எடுத்த போது தரங்கா 31 ஓட்டங்களில் வெளியேற, அடுத்து வந்த குசல் மெண்டிஸ்(4) சந்திமால்(4), தனஞ்சய டி சில்வா(16), சச்சித் பத்திரன (18) ஓட்டங்கள் எடுக்க, இதைத் தொடர்ந்து வந்த வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்கங்களில் ஆட்டமிழந்தனர். இதனால் இலங்கை அணி 39.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 163 ஓட்டங்கள் குவித்தது. இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக நிரோஷன் திக்வெல்ல அரைச்சதம் கடந்த 74 ஓட்டங்கள் குவித்தார். தென்னாபிரிக்கா அணி சார்பில் பிரிடோரிஸ் 3 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார்.

எளிய இலக்கை எட்டுவதற்கு அடுத்து களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் தொடக்க வீரர் டி கொக் 8 ஓட்டங்களில் லஹிரு குமார பந்துவீச்சில் போல்டாகி வெளியேறினார். அடுத்து அம்லா 34 ஓட்டங்களில் ரன் அவுட்டாக, டூப்ளெசிஸ் 24 ஓட்டங்களுடன் வெளியேறினார். நான்காவது வீரராக களமிறங்கிய டிவில்லியர்ஸ் மற்றும் அடுத்து களமிறங்கிய டுமினி இருவரும் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்த, தென்னாபிரிக்கா அணி 32 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 164 ஓட்டங்களை குவித்து வெற்றி பெற்றது. இந்த வெற்றி மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரை 2 போட்டிகள் எஞ்சியுள்ள நிலையில், தென்னாபிரிக்கா அணி கைப்பற்றியுள்ளது. இந்நிலையில் 4ஆவது ஒருநாள் போட்டி எதிர்வரும் புதன்கிழமை கேப்டவுனில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, இப்போட்டியின் இடைநடுவின் போது தேனீக்கள் விளையாட்டு மைதானத்தை சூழ்ந்தமையால் சில மணி நேரங்களுக்கு போட்டியானது இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி தேசிய வாரம் இன்று ஆரம்பம்

பீ.எப்.எம் றிஷாட்




இலங்கையில் மிக வேகமாக அதிகரித்துவரும் தொற்றா நோய் நிலைமைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைய விளையாட்டுத்துறை அமைச்சினால் 2ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்படுகின்ற விளையாட்டுத்துறை மற்றும் உடல்நல மேம்பாட்டு தேசிய வாரம் இன்று ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

சுகம், மகிழ்ச்சி மற்றும் வெற்றிக்காக விளையாட்டு எனும் தலைப்பில் நடைபெறும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் வாரத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இந்நிலையில், நாட்டில் உள்ள ஒவ்வொரு அரச நிறுவனங்களிலும், கிராம சேவகர் பிரிவிலும் இவ்வேலைத்திட்டம் அந்நந்த பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. மேலும், கடந்த வருடத்தைப் போல இம்முறையும் இவ்வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த விளையாட்டுத்துறை அமைச்சினால் ஒவ்வொரு மாகாணங்களிலுமுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் 50ஆயிரம் ரூபா பணத்தை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, இன்றைய முதல் நாள் அரச மற்றும் கூட்டுத்தாபன அலுவலர்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி தினமாகவும், பெப்ரவரி 07ஆம் திகதி தனியார் துறையினருக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினமாகவும், பெப்ரவரி 08ஆம் திகதி சிறுவர் மற்றும் தாய்மார்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினமாகவும், பெப்ரவரி 09ஆம் திகதி பெண்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினமாகவும், பெப்ரவரி 10ஆம் திகதி முதியோர் மற்றும் விசேட தேவையுடையோர்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினமாகவும், பெப்ரவரி 11ஆம் திகதி இளைஞர்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினமாகவும், பெப்ரவரி 12 ஆம் திகதி சமூக பங்களிப்புக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டி20 போட்டியிலும் டி.ஆர்.எஸ். முறை


### ஐ.சி.சி கூட்டத்தில் முடிவு



20 ஓவர் உலக கோப்பையில் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் டி.ஆர்.எஸ். முறை அமுல்படுத்துவது மற்றும் ஒருநாள் போட்டியில் சுப்பர் ஓவர் கடைப்பிடிக்கப்படும் என்று ஐ.சி.சி.யின் கூட்டத்தில் முடிவு மேற்கொள்ளப்பட்டது. சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) கூட்டம் டுபாயில் கடந்தவாரம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி முறையில் மாற்றங்களை செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. 2019ஆம் ஆண்டில் இருந்து 2 ஆண்டுக்கு டெஸ்ட் லீக், 13 அணிகள் பங்கேற்கும் ஒருநாள் போட்டி லீக் மற்றும் 20 ஓவர் உலகக்கிண்ணத்துக்கான மண்டல தகுதி அளவு ஆகியவை நடத்தப்படுகிறது. டி20 போட்டியில் ஆட்டம் சமநிலையில் முடிந்தால் சுப்பர் ஓவர் முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

இதே போல ஒருநாள் போட்டியிலும் சுப்பர் ஓவர் முறையை கடைப்பிடிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி சமநிலையில் முடிந்தால் மட்டுமே சுப்பர் ஓவர் கடைப்பிடிக்கப்படும். மேலும் டி20 உலகக்கிண்ணப் போட்டியில் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் டி.ஆர்.எஸ். முறை அமுல்படுத்துவது என்றும் இக்கூட்டத்தில் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

## கோஹ்லிக்கு கௌரவம்




இந்த ஆண்டு வெளிவர இருக்கும் விளையாட்டிற்கான விஸ்டன் இதழின் அட்டைப்படத்தில் விராட் கோஹ்லியின் படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட்டில் படைக்கப்பட்ட சாதனைகள், வீரர்களின் சிறப்பு போன்றவற்றை வருடத்திற்கு ஒருமுறை தொகுத்து வழங்கும் இதழ் விஸ்டன். இந்நிலையில் 2017ஆம் ஆண்டு வெளிவர இருக்கும் விஸ்டன் இதழின் அட்டைப்படத்தில் இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி இடம்பிடித்துள்ளார். இவர் மும்பையில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் இரட்டைச்சதம் அடித்து அசத்தினார். அந்த போட்டியில் ரிவர்ஸ் ஸ்விப் செய்த புகைப்படத்தை, அட்டை ப்படத்தில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

## அமெரிக்காவின் புதிய பொருளாதார தடைகளுக்கு பதிலடி கொடுப்போம்

### ஈரான் அறிவிப்பு



அமெரிக்கா விதித்துள்ள புதிய பொருளாதார தடைகளுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் அரசு அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள டொனால்ட் டிரம்ப், அதிரடி நடவடிக்கையாக ஈரான், சிரியா உள்ளிட்ட 7 முஸ்லிம் நாடுகளில் உள்ள குடிமக்களுக்கான அமெரிக்க விசாவைத் தடை செய்தார்.

இதற்கு பதிலடியாக ஈரான் நாட்டில் நுழைவதற்கு அமெரிக்கர்களுக்கு தடை விதித்தது ஈரான் அரசு. அத்துடன் ஈரான் ஜனாதிபதி ஹசன் ருஹானி, டிரம்பை கடுமையாக விமர்சித்தார். மேலும், கடந்த சில நாட்களுக்கு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சோதனை செய்தும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஈரானின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்காக கடும் கண்டனம் தெரிவித்தது. ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானத்தை மீறும் வகையில் ஈரான் ஏவுகணை சோதனை நடத்தியிருப்பதால், நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தது. ஆனால், இதனை பொருட்படுத்தாத ஈரான், அனுபவமில்லாத நபரின் அச்சுறுத்தல் பயனற்றது என்று கூறிய ஈரான், எந்த நடவடிக்கையையும் சந்திக்க தயார் என்று சவால் விட்டது.

இந்த சூழ்நிலையில், ஈரான் மீது டிரம்ப் நிர்வாகம் புதிய பொருளாதார தடைகளை விதித்துள்ளது. சீனா, லெபனான், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள நிறுவனங்கள் உட்பட 12 நிறுவனங்கள், 13 நபர்களை குறிவைத்து இந்த தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இதையடுத்து, அமெரிக்காவுக்கு எதிராக விரைவில் பதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஈரான் தெரிவித்துள்ளது.



இது குறித்து ஈரான் வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பிராந்தியத்தில் பயங்கரவாத இயக்கங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் செயற்படும் சில அமெரிக்க தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தடை விதிக்க உள்ளோம். அந்த நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

ஏவுகணை மேம்பாடு மற்றும் அவற்றின் செயற்திறன் அனைத்தும் தற்காப்பு நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு தவிர ஏனைய நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் அவை பயன்படுத்தப்படாது. இது ஈரான் மக்களின் உரிமை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## தாயின் சடலத்தை சுமந்து 32 கி.மீ. பயணித்த இராணுவ வீரர்



இந்திய இராணுவத்தை சேர்ந்த முஹம்மது அப்பாஸ் என்ற படை வீரர் அவருடைய சகோதரருடன் தங்களுடைய தாயின் சடலத்தை, 10 அடி ஆழ உறைபனியில் 32 கி.மீ தூரம் நடந்து சுமந்து சென்று இறுதி கிரியைகளை மேற்கொண்டுள்ளனர்.

அப்பாஸின் 55வயதுடைய தாய் சகீனா பேகம் அவருடன் தங்கியிருந்தவேளை கடந்த மாதம் 29 ஆம் திகதி மாரடைப்பால் மரணமானார்.

அந்த சமயம் பதான்கோட்டில் உள்ள இராணுவ தளத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார் அப்பாஸ். தன் தாயின் சடலத்தை சொந்த கிராமத்திற்கு எடுத்து செல்வதற்காக காஷ்மீருக்கு கொண்டு சென்றார். பின், அங்கிருந்து தன் சொந்த கிராமத்திற்கு உடலை எடுத்துச்செல்ல பலமணி நேரங்கள் அரசின் உதவியை எதிர்நோக்கி காத்திருந்தார். ஆனால், அங்கு நிலவி வரும் கடும்பனி காரணமாக அவருக்கு உதவி கிடைக்கவில்லை.

பின், சகோதரரின் உதவியுடன் தாயின் சடலத்தை சொந்த கிராமத்தை நோக்கி கால்நடையாக சுமந்து சென்றனர். இதற்கு பொது மக்கள் பலரும் உதவி புரிந்தனர். ஜனவரி 31 ஆம் திகதி தாயின் சடலத்துடன் புறப்பட்ட அவர்கள் பெப்ரவரி 2 ஆம் திகதி தங்களுடைய சொந்த கிராமத்தை அடைந்தனர்.

## உலகச் செய்திகள்

## தடை விதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து அமெ.வுக்கு விமானங்கள் இயக்கப்படும்

### கட்டார் ஏர்வேஸ் அறிவிப்பு




டிரம்ப் தடை விதித்த ஈரான் உள்ளிட்ட நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு விமானங்கள் இயக்கப்படும் என்று கட்டார் விமானச் சேவை அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற டொனால்ட் டிரம்ப் அதிரடி உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். சமீபத்தில் ஈரான், ஈராக், சிரியா சூடான், சோமாலியா, லிபியா மற்றும் யெமன் ஆகிய 7 முஸ்லிம் நாடுகளை சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைய 90 நாட்கள் விசா தடை விதித்தார்.

மேலும் சிரியா அகதிகள் நுழைய நிரந்தர தடை விதித்தார். இது அமெரிக்காவில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் போராடி வருகின்றனர்.

இதனிடையே, முஸ்லிம்கள் நுழைய அனுமதி மறுத்து டிரம்ப் பிறப்பித்த உத்தரவுக்கு அமெரிக்காவின் சியாட்டல் நீதிமனறம் இடைக்கால தடை விதித்தது.

இந்நிலையில், டிரம்ப் தடை விதித்த ஈரான் உள்ளிட்ட நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு விமானங்கள் இயக்கப்படும் என்று கட்டார் எயார்வேஸ் அறிவித்துள்ளது.

அமெரிக்க நீதிமன்றம் விதித்த இடைக்கால தடையை தொடர்ந்து தலைநகர் தோஹாவை மையமாக கொண்டு செயற்படும் கட்டார் எயார்வேஸ், இத்தகவலை தனது வலைத்தள பக்கத்தில் தெரிவித்துள்ளது. அதாவது, முறையான விசா வைத்திருப்போர் மட்டும் அமெரிக்காவுக்கு பயணம் செய்ய அனுமதிக்கப்படும் என தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டன், சிகாகோ உள்ளிட்ட 15 நகரங்களுக்கு கட்டார் எயார்வேஸ் தற்போது விமானங்களை இயக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 06TH FEBRUARY 2017